# நெஞ்சை விட்டகலாத 'தேவி' அன்னையின் நினைவுச் சுடர்



## அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

### 31ஆம் நாள் நினைவு மலர்

2016.05.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/கட்டைப்பிராயை பிறப்பிடமாகவும், இல:867, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **புவனேஸ்வரன் கமலாதேவி**

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# "தேவி" அன்னையின்

# நினைவுச் சுடர்

2016.05.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பெனும் அமுதமூட்டி -எங்கள்
அறிவெனும் பயிர் வளர்த்து
பண்பெனும் நீரைப் பாய்ச்சி
கண்ணெனக் காத்த தாயே!
எங்களின் மூச்சாய்
உங்களின் உயிர் உருக்கி
மண்ணிலே வாழ வைத்த அன்னையே
உங்கள் திருவடிக்கு இம் மலர்
சமர்ப்பணம்



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மண்ணுலகில்
1950.07.12

அமரர்

விண்ணுலகில்
2016.04.24

# புவனேஸ்வரன் கமலாதேவி (தேவி)

## திதி நிர்ணய வெண்பா

சீரார் துர்முகியில் சேரிளமைச் சித்திரையில்
சாருமொளி அபரபக்கத் துதியையிலே - பார்புகழும்
கமலாதேவி என்னும் காரிகையாள் அரன்பாதம்
கதியெனவே சென்றாள் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

முன்னவனே! யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்சுகந்தவனே! மன்னவனே
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே! நின்தாள் சரண்

## தேவாரம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலனீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே.

திருநாமம் அஞ்கெழுத்தும் செப்பராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகஒநயப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலையெம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த் (து)
உன் விரையார் கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந் (து) உன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை (சிவனே)
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைப்பேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத்துள் சித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்நக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைக்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண்குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புத கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாட
அறவா நீ ஆடும் "போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையொனே கதிர்காமப் பெருமானே

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனொடு ஞான மொழி பேசு முகமொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்
அதியருணாசலம் அமைந்த பெருமானே.

வாழ்த்துவான்முகில் வழாது பெய்க மலி வளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.


திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா நினைவுகள்



மாணவப் பருவத்திலே...



பதிவுத் திருமணத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி அவர்கள் வாழ்க்கைத் தடத்தில் இருந்து...

வன்னி/ முள்ளியவளை 'காட்டா விநாயகர்" பதியில் சைவ வேளாளர் குலத்தில் காட்டு விதானையார் சின்னத்தம்பியின் பரம்பரையில் பிறந்த கதிர்வேலு ஆறுமுகத்துக்கும் யாழ்/ கட்டைப்பிராயில் சிவபூசகர் மகனான சின்னத்தம்பியின் மகள் மாணிக்கத்துக்கும் கடைசிப் பிள்ளையாக 1950.07.12ஆம் நாளில் ரோகிணிநட்சத்திரத்தில் அழகும்லட்சுமி கடாட்சமும் பொருந்தியவராக பிறந்தார். இவருக்கு கமலாதேவி என்னும் பெயர் வைத்து வீட்டில் செல்லமாக 'தேவி' என்றே அழைத்து வந்தனர். இவருக்கு சிவசுப்பிரமணியம் என்னும் மூத்த அண்ணரும், விசாலாட்சி, கனகேஸ்வரி என்னும் இரு அக்காமாரும், சிவபாதசுந்தரம் என்னும் ஓர் இளைய அண்ணாவும், சகோதரர்கள். கடைக்குட்டியாக இவர் பிறந்த பின் இவர்களது இல்லச் சிறப்பும் தொழில் மேம்பாடும் ஏற்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்வியங்காடு சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் அதன் பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் பயின்று 1964ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணம் சித்தியடைந்து தனது உயர் கல்வியை செங்குந்த இந்துக் கல்லூரியிலும் பயின்றுள்ளார். இக் காலத்தில் தனது சகோதரரின் வாணிபச் செயற்பாட்டிற்கு உதவியதுடன் அயலில் உள்ள சிறார்களுக்கு கல்வியறிவூட்டி அவர்களையும் மேம்பாடடைய வைத்தார். இவருக்கு மூத்த சகோதரர்கள் எல்லோரும் திருமணமாகிய பின்பு அனைவரது விருப்பப்படி தாய் மாமன் மகனான சிவக்கொழுந்து புவனேஸ்வரனை 1981.02.01ம் நாளில் தனது கணவனாக ஏற்றுக்கொண்டார். இவரது விருப்பப்படியே கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் திருமணம் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி வீடு சேருதலும் நன்மக்கட்பேறும்....

கமலேசன் என்னும் பெயருடைய மூத்தமகன் 1981.11.18ம் நாளில் பிறந்தான். அவரது பலனின் படி வட்டக்கச்சியில் காணியும் வீடும் வாங்கி 1982ம் ஆண்டு வட்டக்கச்சியில் குடியேறினார்கள். 1984.04.01ஆம் நாளில் தர்மீசன் என்னும் பெயருடைய இரண்டாவது மகனும் பிறந்தான். பெண்பிள்ளை இல்லாத குறை நீக்க மயூரதனி என்னும் மூத்த பெண்பிள்ளை 1987.01.18ம் நாளில் பிறந்தாள். மூன்றாம் கால் பெண்பிள்ளை என்ற குறையை நீக்க கடைசிக் குட்டியாக 1992.01.04ம் நாளில் யோதிகா என்னும் பெண்பிள்ளையும் பிறந்தாள்.

பிள்ளைகள் பிறந்த காலத்திலே நாட்டில் யுத்த சூழ்நிலை, போக்குவரத்து சீரில்லை, பொருளாதாரத்தடை, போன்றன தொடர்ந்தன. இயற்கையின் சீற்றத்தால் கொடிய வரட்சி, வெள்ளப்பெருக்கு ஆகியன மாறி மாறி வந்தன. கொடிய நோய்களான மலேரியா, நெருப்புக் காய்ச்சல், மூளைமலேரியா போன்ற நோய்களையும் தாக்குப் பிடித்து மனம் கோணாது உள்ள வளங்களை பயன்படுத்தி தன்பிள்ளைகளையும் அயலில் உள்ள பிள்ளைகளையும் கல்வியில் மேம்பாடடையச் செய்ய ஒரு பெருவிருட்சமாகத் திகழ்ந்துள்ளார்.

1994ஆம் ஆண்டு யுத்தம் ஓய்ந்து இடைக்கால யுத்த நிறுத்தம் இதனை பயன்படுத்தி புதிய மனை ஒன்றை அமைத்து புதுமனையில் இருந்த போது 1995/96 ஆம் ஆண்டு சூரியக்கதிர் நடவடிக்கையால் உறவினர்கள் வந்து இவருடன் தங்கி இருந்தனர். நீரே கிடைக்காது வறண்டிருந்த கிணறு நீர்பெருகி இன்றும் வற்றாத கொடையாக தேடித் தந்துள்ளார். இடப்பெயர்வால் இவரது மூத்த அண்ணண் சிவசுப்பிரமணியமும் இளையஅக்கா கனகேஸ்வரியும் 1997ம் ஆண்டில் இறந்து விட்டனர். இவரது இளைய அண்ணாவும் 2005ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் இறந்து விட்டார். யுத்தம் நீடித்தது குடிமனை எல்லாம் எறிகணை வீச்சும் விமானக் குண்டுத்தாக்குதல்களும் எது எவ்வாறிருந்தாலும் கணவர் தொழில் ரீதியான கஸ்டங்களை எதிர்நோக்கினாலும் தனது பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். 2004 தொடக்கம் 2006 ஆவணி மாதம் வரை தற்காலிக யுத்த ஓய்வு, இரண்டாவது மகனையும், மூத்தமகளையும் பல்கலைக்கழகப் படிப்புக்கு அனுப்பி வைத்தார். மீண்டும் பூகம்பம் வெடித்தது போல 2006 ஆவணியில் யுத்தம் தொடங்கி விட்டது. தரைவழித்தாக்குதல்,வான் வழித்தாக்குதல், பொருளாதாரத்தடை இச்சமயத்தில் 2008ம் ஆண்டு தாயார் மாணிக்கமும் இறந்து விட்டார்.

பல்கலைக்கழகங்கள் எல்லாம் மூடப்பட்டன. படிப்புக்காக சென்றவர்கள் திரும்பி வந்து விட்டனர். வயதுடைய பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாத துப்பாக்கிய நிலை இந்நிலையில் இடப்பெயர்வு நாளுக்கொரு இடமாக இடம் பெயர்ந்து பாதுகாப்பு பிரதேசம் என்று அறிவிக்கப்பட்ட மாத்தளன், வலைஞர் மடம் வரை சென்று பதுங்குகுழிகளில் தங்கி தன் பசியைப் பொறுத்து பிள்ளைகளைக் காப்பாற்றி 2009ம் ஆண்டு சித்திரை மாதம் இராணுவத்திடம் சரணடைந்து நலன்புரி நிலையம் என்னும் பெயருடைய செட்டிக்குளம் கெந்தகப்பூமியில் கொதிக்கும் வெயிலில் வேக வைக்கப்பட்டதால் பாதிப்புற்ற இவரது உடல் செங்கமாரி, தொடர்காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டது.

## மீள்குடியேற்றமும் அபிவிருத்திகளும்

2010 ஏப்பிரல் மாதம் நலன்புரிநிலைய வாழ்க்கை முடிந்தது சொந்த ஊருக்கு வந்த போது வீடு உடைந்து நிரந்தர பயிர்கள் அழிக்கப்பட்டு காணி பாலைவனத்திற்கு ஒப்பாக இருந்தது. ஊரோடு ஒத்த நிலையைக் கண்டு மனத்தை புண்படுத்தாது வீட்டைத் திருத்தவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைகளை மீள்நடுகை செய்யவும் பிள்ளைகள் இழந்த கல்வியை தொடரவும் மீண்டும் பாடுபட்டதன் பயனாக மூத்தமகனுக்கு முகாமைத்துவ உதவியாளர் பணியும் மூத்த மகளுக்கு தாதியர் உத்தியோகப்பணியும் ஏற்கனவே முறிவடைந்த மருத்துவபீட கல்வியை இரண்டாவது மகன் தொடரவும் கடைசிக்குட்டி 2011ம் ஆண்டில் மாவட்டத்தில் 01ஆளாக மருத்துவபீடம் சென்றதையும் கண்டு

'ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனை
சான்றோர் எனக் கேட்டதாய்'

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கமைய பேருவகை அடைந்தார்.

## நோய்த் தாக்கமும் இறுதிக்கால விருப்பக்களும்

மீள்குடியேறி கவலைகள் மறந்து இருந்தாலும் தனது உடலில் ஏதோ தொற்றா நோய் அறிகுறி இருப்பதை அறிந்த இவர் வாழ்வு நிலையற்றது. அதற்கு முன்பாக பிள்ளைகளுக்கு திருமணபந்தத்தை ஏற்படுத்த வேண்டும். பேரக்குழந்தைகளை பார்க்க வேண்டும் பிள்ளைகளின் படிப்பின் உயர்ச்சியை காண வேண்டும் எனப் பெருவிருப்புக் கொண்டார். விரைவாக செயற்பட்டு 2013ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மூத்த மகனுக்கு மர்மிதா என்ற ஆசிரியையை இணையாக்கினார். இவ்வாண்டிலேயே நோய்க்கான முதலாவது சத்திரசிகிச்சை மேற்கொண்டு உடல் நலம் தேறி 2014ம் ஆண்டு ஆனிமாதம் தனது மூத்த மகளுக்கு கஜனன் (ஜேர்மனி) எனும் மணமகனைத் தேடி இந்தியாவுக்குச் சென்று திருமணத்தை நிறைவேற்றி அவ்விட ஆலய தரிசனங்களைச் செய்து வந்துள்ளார். மகனுக்கும் சப்தகி என்ற பேத்தியும்,மகளுக்கு கேசியா என்ற பேத்தியும் பிறந்த சந்தோசம் அவர்களுடன் நேரிலும் தொலைபேசியிலும் உரையாடியும் சந்தோசப்பட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கட்டமாக இரண்டாவது மகனின் வைத்தியபட்டப் படிப்பு சிறந்த பெறுபேறு கிடைத்த சந்தோசம் அவருக்கு திருமணபந்தம் ஏற்படுத்த வேண்டும் கடைசிக்குட்டி யோதிகாவின் பட்டமளிப்பையும் பார்க்க வேண்டுமென்ற விருப்பு இருக்கும் போது 2016 தைமாதம் தொற்றா நோய்த்தாக்கம் தீவிரமடைந்தது. தனது நிறைவேறாத விருப்பை நிறைவேற்றி எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி செய்யவேண்டுமென கணவரையும் தனது மூத்த மகனையும் கேட்டுக் கொண்டுள்ளார். மருத்துவத்துறை சார்ந்த பிள்ளைகள் தாயாரை காப்பாற்ற துறைசார் வைத்தியர்களின் உதவிகள் பலவற்றை பெற்றாலும் தொற்றா நோய் சுகப்படுத்த முடியாத நிலையில் துர்முகி வருடம் 2016.04.24 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (சித்திரைத் திங்கள் 11ஆம் நாளில்) இறைபதம் அடைந்து விட்டார்.

அம்மாவின் இழப்பு எம்மால் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு சோக நிகழ்வு. பிறந்தவர் யாரும் நிலைத்து நின்றதில்லை பிறப்பு ஒன்றிருந்தால் இறப்பும் நிச்சயம் அவர் நிழல் எம்முன் நிலைத்து நிற்கின்றது. அவரது உயிர் மீண்டும் எம் உறவில் வந்து சேரும் என்ற நம்பிக்கையில் மனம் ஆறுதல் அடைகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனது நெஞ்சை விட்டகலாத நினைவுகள்...

மனித வாழ்வில் பிறப்பு, திருமணம், இறப்பு என்பன மைல் கல்களாகும். திருமணமென்பது தொடர் சந்ததியை நிலைநிறுத்தும் ஆயிரம் காலத்துப்பயிர் என்பார்கள். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்ற தத்துவத்துக்கமைய எனக்கு வாய்ந்த இல்லாள் எனது முறை மைத்துனி. இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து நல்ல சந்ததியை உருவாக்கி எனக்கு இணையராக 35வருடங்கள் வாழ்ந்து அன்பான அரவணைப்பு, இன்சொல், அடக்கம், நற்பண்புகளால் கணவனையும் பிள்ளைகளையும் ஆறுதல் படுத்தி இன்று அமரத்துவம் அடைந்து விட்டீரேயம்மா. கடந்த 03 சகாப்தங்களாக துன்பியலில் துகழ்ந்தோம் நல்ல கால நேரம் கனிந்தும் அவருடன் இருக்க கொடுத்துவைக்காத பாவியாகி விட்டேனம்மா

துன்பவியல் சூழ்ந்ததாலும் இக்காலத்தில் தான் நன்மக்களை பெற்று அவர்களை கல்வியில் மேம்படுத்தி அவர்களை உயர்வடையச் செய்து தனது இலட்சியத்தை நிறைவேற்றி விட்டாயம்மா.

1981ல் திருமணம் 1982ல் வட்டக்கச்சியில் சொந்த காணி வாங்கி குடியேறிய இவர் பொருத்தமற்ற வீடு நீரற்ற வரண்ட கிணறு பயிர்களற்ற காணி இக்குறைகளை தனது முயற்சியால் புதுமனைகட்டி நீர்பெருகும் கிணற்றை அமைத்து பிள்ளைகளை வளர்த்தது போல தென்னம் பிள்ளைகளை வளர்த்து தினமும் நீர்பாய்ச்சி சோலையாக்கினாயம்மா

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய அதற்கு இலட்சணமாக கணவர் பிள்ளைகளையும் அனுசரிக்கும் தாயாக இருந்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் தொழில் நிமித்தம் வேறிடம் சென்ற போதும் ஊடரங்குச் சட்டத்தால் தொடர்புகளின்றி நீடிய நாட்கள் தனிமையில் இருந்தாலும் தன் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் ஆகியவற்றில் உன்னை உருக்கி மிகுந்த அக்கறையுடன் வளர்த்தீரம்மா.

நானோ ஒரு கூட்டுறவுத்துறை சார்ந்தவன் சமூகசேவைகள் சமயப்பணி, சமாதானநீதிவான் பணியும் செய்பவன் போற்றுவோரும் உண்டு. தூற்றுவோரும் உண்டு. எப்பெயர் வந்தாலும் கணவனுக்கு தேவையான உதவிகள் ஆலோசனைகளை வழங்கும் ஒரு நன்மனையாளாகவே இருந்துள்ளார் எனது இணைவாழ்க்கையில் என் இல்லாளின் வாயில் இன் சொல்லையே கேட்டுள்ளேன் எப்போதாவது வன்சொல் கேட்டதே இல்லையம்மா.

1996 தொடக்கம் இடப்பெயர்வு அச்சவாழ்க்கையும் தான் இக்காலத்தில் தன்பிள்ளைகளைக் காப்பாற்றவும் அவர்களை மேம்படுத்தவும் நித்தம் நோன்பிருந்து தன்குல தெய்வங்களை வழிபட்டு மெழுகாய் உருகி அநேக பிள்ளைகளுக்கும் ஒரு பெருவிருட்சமாக இருந்து ஆறுதல் கொடுத்தாயே அம்மா. 2008ம்ஆண்டு நிரந்தரமாகவே இடப்பெயர்வு பாதுகாப்பு வலயம் புனர்வாழ்வு நிலையம் என்ற இடங்களில் பதுங்கு குழிகளுக்குள்ளும் பாலைவனத்திடலும் வாழ்ந்து நோய்த் தாக்கத்துக்குட்பட்டு நலிவடைந்து பொருட்களை எல்லாம் இழந்து 2010 சித்திரை மாதம் சொந்த ஊருக்கு வந்து கண்ட காட்சி நெஞ்சை வெடிக்க வைத்தது. வீடு உடைந்து தென்னைகள் அரைவாசி அழிந்து சீரழிந்த நிலையில் காணப்பட்டது. உயிர் தப்பியதே போதும் இவற்றைத் தேடலாமென என்னை ஆறுதல்கூறி வீட்டைக் கட்டி தென்னம் பிள்ளைகளையும் மீள்நடுகைசெய்தும் தனது பிள்ளைகளின் கல்வியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரவைத்து பூரித்திருந்தாயம்மா இடப்பெயர்வால் நலிந்த உடலில் தொற்றாநோய் தாக்கல் ஏற்பட்டு விட்டதையும் அதன் தாக்கத்தையும் உணர்ந்த நீங்கள் வாழ்வு நிலையற்றது. தான் உயிருடன் இருக்கும் போதே பிள்ளைகள் உயர்வடைந்து திருமணத்தில் இணைய வேண்டும் பேரப்பிள்ளைகளை பார்க்க வேண்டுமென்ற பெருவிருப்பு. பிள்ளைகள் உயர்வடைந்தனர் இருவர் திருமணபந்தத்தில் இணைந்தனர். இருவருக்கும் பிள்ளைகள் பிறந்த சந்தோசம் பேரப்பிள்ளைகளை நேரிலும் தொலைப்படத்திலும் பார்த்த சந்தோசம், மகளின் திருமணத்திற்கு இந்தியாவுக்குச் சென்று அதனை நிறைவேற்றி கோயில் தரிசனங்கள் முடித்து வந்து மற்ற பிள்ளைகளின் நலன்களைப் பார்க்கும் பொழுது தானே 2016ம் ஆண்டு நோய்த்தாக்கம் தீவிரமடைந்தது. கவலையடையவில்லை கண்கலங்கவில்லை என்னிடம் இரு பிள்ளைகளின் பொறுப்பை கையளித்து விட்டேன் என்றார் இச்சொல் என்னை கண்கலங்கச் செய்து விட்டது.

புதிய துர்முகி வருடப்பிறப்புடன் படுத்தவர் சித்திரைத்திங்கள் 11ம் நாள் 24.04.2016 துதிகைத்திதியில் இறைவனடி சேர்ந்து விட்டார் இவர் படுத்ததும் என்னாலும் பிள்ளைகளாலும் மனம் கோணாது பணிவிடைகளைச் செய்து விட்டோம் "மரணம் வாழ்வின் முடிவல்ல மீண்டும் எம்மிடம் வருவாள்" என்ற நம்பிக்கையில் மனம்ஆறுதலடைகின்றோம்

"சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்!
தோகைமயில் மீது அகப்பட்ட சர்ப்பமானேன்!
காடுகளில் இனம் பிரிந்த கலைகளானேன்!
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்!
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்!
எனக்குற்றாருமில்லாப் பித்தனானேன்!
பாடுபட நான் அறிவேன் பவளக்கந்தா!
பச்சை மயில் ஏறிவந்து என்னை இரட்சிப்பாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பமெனும் ஆனந்த ஊஞ்சலில்
ஆடிய காலம்...

மூத்த மகனின் திருமணத்தில்...



மூத்த மகளின் திருமணத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகன் கமலின் உள்ளக்குமுறல்

அம்மா உங்கள் வதன முகம் காணாது ஏங்குகின்றேனம்மா முதல் ஆண்பிள்ளையாக என்னைப் பெற்றதாக எப்போதும் சொல்லி மனம் பூரிப்படைவீர்களே அம்மா என்னை சீராட்டி கல்வியறிவூட்டி சொல்ல முடியாத துன்ப துயரங்கள் மலிந்த இக் காலத்திலும் பொறுமையுடனே என்னை கல்வியிலும் தொழிலிலும் மேம்படுத்தி மகிழ்ந்தீர்களே அம்மா. நான் பிறந்து வளர்ந்தது போர்சூழலும் அவலங்கலும் நிறைந்த காலம் எனது மனோநிலை பாதிக்காது இருக்க நீங்கள் பட்ட அவலங்கள் தியாகங்களை உணர்ந்திருக்கின்றேனம்மா.

எனது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பேரவலம் அதுதான் ஆனந்தபுரத்தில் ஏற்பட்டது. அம்மா அன்று கதறியதையும் பரிதவித்ததையும், புழுவாய்த் துடித்ததையும் நான் அறிவேனம்மா. அதனால் உங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டதாக எண்ணுகின்றேன். இடப்பெயர்விற்கு பின் மீள்குடியேறி உடைந்த வீடு திருத்தி அழிந்த பயிர் நாட்டி என் சகோதரர்களின் உயர் படிப்புத் தொடர தற்காலிகமாக அவர்கள் நலனுக்காக கொக்குவிலில் குடியிருந்த போது நோய்தாக்கம் அடையாளப்படுத்தப்பட்டதால் எனக்கும் எனது தங்கை மயூராவிற்கும் புதுவாழ்வு தேட வேண்டும் பேரப்பிள்ளைகளை பார்க்க வேண்டுமென்ற ஆவலையும் நிறைவேற்றி மனமகிழ்ந்தீர்கள் அம்மா உங்களது விருப்பம் போல முதல் பேரப்பிள்ளை "சப்தகி" பிறந்த செய்தி கேட்டு வைத்தியசாலைக்கு ஓடோடி வந்து அவளை தூக்கி முத்தமிட்டு அரவணைத்து கதைகள் பேசி ஆனந்தமடைந்தது இன்றும் எம் மனதில் நிழலாடுகின்றதம்மா. மாறாத நோய் உங்களை பீடித்த போது உங்கள் உடல் நலம் வேண்டி நோன்பிருந்து ஆண்டவனே நீயே தஞ்சமென்று வேண்டாத தெய்வங்களே இல்லை. அவை கூட எம்மை வஞ்சித்து காலன் உங்கள் உயிரை கவர்ந்து செல்ல மௌனித்திருந்தனவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக உங்கள் குலதெய்வம் அம்மனுக்கு நீங்களே நேர்த்தி வைத்து அதனையும் குறைவின்றி நிறைவேற்றிய அன்றே அவள் சந்நிதியில் உடல் உபாதை தலைகாட்டியதாகக் கூறிய போதும் அந்த அம்மனே உங்களைக் காத்திடுவாரென மலைபோல நம்பினோம். அதுகும் கைகூடவில்லையம்மா.

இறுதிநாளன்று எனது தெய்வத்தாய்க்கு உங்கள் பிள்ளைகள் சேர்ந்து உணவூட்ட ஆவல் கொள்ள பசி மறந்து மீளாத்துயில் கொண்டது ஏனம்மா. ஏதுமறியாத வயதில் தன் பிஞ்சுக்கரங்களால் உரிமையுடன் என்பிள்ளை "சப்தகி" நெய்ப்பந்தம் பிடித்து உங்களை வழியனுப்பி வைத்தாளோ அவள் என் அப்பம்மா எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேனம்மா அம்மனே வடிவானவரே அத்தெய்வத்துக்கே தொண்டு செய்யவா சென்றுவிட்டீர்கள் உங்கள் பிரிவை எம் மனது ஏற்க மறுக்கின்றது தவியாத்தவிக்கின்றோம் மீண்டும் எம்மிடம் வந்து இணையுங்கள் அம்மா.

**அன்பு மூத்த மகன்**
**பு.கமல்**



**நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது**
**நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது**
**நீ துணிவுள்ளவான இருந்தால் அச்சம் வராது**
**- கன்ஃபூஸியஸ்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்றழைக்க யாருள்ளார் இனி எமக்கு..

என் நினைவு தெரிந்த நாள் முதல் உங்கள் வாழ்க்கைப் போராட்ட வாழ்வென்பது எனக்கு நன்கு புரிந்திருந்தது அம்மா. உங்கள் வாழ்க்கைக்கான பிள்ளைகளை நன்நிலைக்கு உயர்த்துவதற்கான வாழ்வு போராட்டம் நிறைவடைந்து நாமெல்லாம் நன்நிலைக்கு உயர்ந்து நிற்கும் போது -அதன் பலனை அனுபவிக்க நீங்கள் இல்லையே அம்மா.

நாம் சிறுபிள்ளைகளாக இருக்கும் போது எமது வட்டக்கச்சியின் எமது நிலைமையைச் சிலரே அறிவர் தண்ணீருக்கு தட்டுப்பாடு மின்சார வசதிகள் இல்லை. அப்படியிருந்தும் எமை குளிப்பாட்டி சீராட்டி உணவூட்டி வளர்த்தெடுத்தீர்களே! திட்டமிட்ட படி நாம் வசிக்கும் வீட்டை உங்கள் மேற்பார்வையிலே கட்டி முடித்தீர்களே இவ்வாறு எமது வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் நீங்கள் தான் முன்நின்றீர்கள் அம்மா.

காலத்தின் வஞ்சிப்பால் என வாழ்வில் சில வருடங்களை தொலைத்த போதும் நான் சோர்ந்து விடவில்லை ஏன் என்றால் நீங்கள் எல்லோரும் யுத்தத்தின் பிடியில் இருந்து தப்பி வந்துவிட்டீர்களே என்பதால் தான் அம்மா ஆனால் என் பட்டப்படிப்பை கடினமுடன் நிறைவு செய்யும் போது காலன் உங்களை கவர்ந்து சென்று எனை மீண்டும் வஞ்சிக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

என் பிள்ளைகளின் படிப்பு நிறைவடைகின்றது நான் வட்டக்கச்சிக்கு அப்பாவுடன் வந்து விடுவேன் என்று நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதைக்கேட்டு தமது அன்றி தங்களுடன் வாழ வந்துவிடுவார் என்று சுற்றத்தவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனரே. சுற்றம் உறவுகளை எவ்வாறு அனுசரிக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டி எமக்கு புத்திமதி சொல்லுவீர்களே எல்லா உறவுகளும் சங்கமிக்கும் இடமான எம் இல்லம் நீங்களின்றி குறை நிற்க போகின்றதே!

இரு வருடத்தின் முன் வரக் கூடாத நோய் உங்களை பீடித்த போதும் ஒருபுறம் நோயின் வலி சுமந்த படி மறுபுறம் அண்ணாவினதும் மயூராவினதும் திருமணத்தை நடாத்தி வைத்தீர்களே அச்சமயம் யாருமறியார் எம் மனக்குமுறலை இருந்தும் இன்முகத்தடன் காட்சி தந்தீர்களே!

பரீட்சைக்கு புறப்படும் எங்களை வழியனுப்பும் உங்களின் மனப்பதட்டம் எங்களை விட அதிகம் என்பதை அறிவேனம்மா இனி எப்பரீட்சைக்கு ஆயத்தமாகும் போது உமை எம் விழி தேடி பரிதவிக்குமே அம்மா உங்கள் வைத்திய பரிசோதனை முடிவுகள் பாதகமான முடிவைத்தந்த போது மனதில் எழுந்த சொல்லெணா துயரை ஜீரணித்துக்கொண்டு அதை பக்குவமாக உங்களுக்கு எடுத்துச் சொல்லி உங்கள் மனதுக்கு தென்பூட்டும் காரியத்தை செய்ய எனை விதிக்கும் அளவிற்கு இறைவனுக்கு என்மீது என்ன கோபமோ?

என்பட்டப்படிப்பு முடிந்த பின்னர் உங்கள் இறுதி நாள் வரை உங்கள் அருகில் இருந்து பணிவிடைகளும் வைத்தியமும் என்கையாலேயே செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமை என் வாழ்வில் நான் பெற்ற வரமாகும் உங்கள் மகன் வைத்தியனாக உங்களுக்க என்ன செய்ய வேண்டுமோ அதை செய்திருந்தேன் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி இருமாதங்கள் நோய் உங்களை தீவிரமாக பீடித்திருந்த போதும் தினம் கண்ணீர் விட்டு தேம்பியழுத எமக்கு நீங்கள் சொன்னவை ஆறுதல் வார்த்தைகளே இறுதி நாட்களில் கூடுதலாக நீங்கள் உதிர்த்த வார்த்தைகள் அழாதீர்கள் எனது பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்லுங்கள் என்பதே ஆனாலும் அவஸ்தையுற்ற உங்கள் மனதுக்கு ஆறுதல் சொல்லியிருக்க வார்த்தையிருக்கவில்லை அம்மா.

எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய கடமை மீதமிருக்க நான் உங்கள் இறுதிக் கடமை செய்ய வேண்டியதாயிற்றே அம்மா எம்வாழ்வில் இனி நடக்கும் நாற் காரியங்களின் போது எம் விழி உமைதேடி பரிதவிக்குமே அம்மா எல்லாம் கனவாகவே தோன்றுகின்றது புகைப்படத்தில் எம்மோடு நீங்கள் நிற்கிறீர்கள் ஆனால் நியத்தில் நினைவுகளாய் மட்டும் அம்மா உங்களுடன் நாம் வாழ்ந்த நாட்கள் திரும்பி வராதா என ஏங்கும் எண்ணங்களுடன் கண்ணீருடன் நாம் அம்மா.

**அன்பு இளைய மகன்**
**பு.தர்மீசன்**

**- நல்வழிகள்...-**

**சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது இதயத்தின் ஓசை
**சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது இளமையின் ரகசியம்
**படிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது அறிவின்
**நட்புக்கு நேரம் ஒதுக்குவோம்** அது மகிழ்ச்சியின் வழி
**தியானத்திற்கு நேரம் ஒதுக்குவோம்** அது தெளிவுக்கு வழி
**உழைப்புக்கு நேரம் ஒதுக்குவோம்** அது வெற்றிக்கு வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

எங்கள் தெய்வம்
உங்கள் அழகிய முகம் காண
மனம் ஏங்குதம்மா
நெஞ்சம் கனக்கிறது
வார்த்தைகள் எழவில்லை
கண்ணீரை வடிக்கின்றேன்



அம்மா என்ற சொல்லின்
முழு அர்த்தம் நீங்கள் அம்மா
அன்பால் அரவணைப்பீர்கள்
சோர்ந்து இருக்கும் வேளையில்
தோள் கொடுத்து நிமிர்த்தி விடுவீர்கள்
எமது சிறிய உயர்வைக் கண்டும்
மனம் பூரிப்பீர்கள்

உங்கள் கஸ்டத்தை எமக்கு சொல்லாமல் எம்மை
ஆனந்தப்படுத்துவீர்கள் சிறிய துன்பம் கண்டும் துயறும்
என்னை ஆறுதல் வார்த்தை சொல்லி நிமிர்த்தி
விடுவீர்கள் தொலைபேசியில் உங்கள் குரல் கேட்டால்
சோர்வு எல்லாம் போய்விடும் அம்மா எனக்கு இறுதியில்
உங்கள் முகம் காணாத பாவி ஆகிவிட்டேன்

உலகிலே அன்பான அப்பா
அரவணைக்கும் அம்மா எமக்கு அமைந்தது என்று
ஆனந்தமடைந்திருந்தோம்
பொறுக்கவில்லை காலனுக்கு
கவர்ந்து விட்டான் உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நேரமும் புன்னகை பூத்த முகம் உங்களது
உலகில் அழகிய பெண் நீங்கள் தான் அம்மா
உங்களுக்கு பிள்ளைகளாக பிறந்ததிற்கு
எவ்வளவு பெருமை ஆனந்தம் எங்களுக்கு

உங்கள் ஆசை பேத்தி அம்மம்மா
என்று அழைக்கின்றாள்
அவளது மொழி கேட்க நீங்கள் இல்லையம்மா
நெஞ்சம் வெடிக்கிறது அம்மா எனக்கு
ஆறுதல் சொல்ல நீங்கள் இல்லை
நாம் யாரிடம் ஆறுதலடைவது

நீங்கள் எம்மை விட்டு பிரிய நினைக்கவில்லை அம்மா
கொடுமையான காலன் அனுமதியின்றி
அழைத்து விட்டான் உங்களை
தாங்க முடியவில்லை அம்மா உங்கள் பிரிவு

நினைவெல்லாம் நீங்கள் தான்
ஜீவன் உருகுது அம்மா எம்முடன்
பல ஆண்டுகள் இருப்பீர்கள் என நினைத்தோம்
நிஜமாகவில்லை பாதியிலே சென்று விட்டீர்கள்
உங்கள் குரலுக்கு ஏங்குகின்றோம் கேட்கவில்லை
உங்களுடன் கதைக்க வேண்டும் என
துடிக்கின்றோம் முடியவில்லை பாவிகளாகி விட்டோம் அம்மா
கைகளை நீட்டுகின்றோம் கட்டி அணைக்க முடியவில்லை கட்டி
அணைத்து கதை சொல்ல துடிக்கின்றோம் மடியில் படுத்து
எங்கள் துயர் போக்க
நினைக்கின்றோம் இயலவில்லை அம்மா உங்கள்
அரவணைப்பிற்கு மனம் ஏங்குதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் எங்களால் முடியவில்லை
எல்லாம் வெறும் கனவாகிறது
ஏன் இந்த கொடுமை எங்களுக்கு மனம் எல்லாம் நீங்கள் தான்
ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எங்கள் கவலை உங்களைப்
போல் யாரும் கிடைக்கமாட்டார்கள் எமக்கு உலகில் இனி மறு
ஜென்மத்திலும் உங்கள் பிள்ளைகளாக வேண்டும்
நீங்கள் தான் அம்மாவாக வேண்டும்
எங்கள் ஆசை அம்மா உங்களை
நினைக்காமல் இருக்க முடியவில்லை
எங்களுடன் நீங்கள் எப்போதும் இருக்கிறீர்கள்
என்று சாந்தி அடைகின்றோம்.

அன்பு மூத்த மகள்
மயூரதனி
(மயூரா)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி மகள் யோதிகாவின் ஆறாத்துயர்...

ஐயிரண்டு திங்களாக என்னைச் சுமந்து கடைசிப் பிள்ளையென மிகவும் செல்லமாக வளர்த்தீர்கள் ஒருநாள் கூட அம்மாவின் கடுமையான சொல்லை நான் கேட்டறியேன் இளமையில் நான் பிடிவாதக்காரியாய் இருந்ததையும் அம்மாவின் அரவணைப்பாலும் அன்பான பேச்சாலும் மாறிவிட்டதாக மற்றவர்கள் சொல்லக் கேள்விப்பட்டேன் எது வேண்டுமோ வாங்கித் தருவார் எங்கு செல்ல வேண்டுமானாலும் மறுப்பின்றி அனுமதிப்பார்.

மிகவும் துன்ப துயர் சூழலிலேயே எம்மை வளர்த்து ஆளாக்கி தமக்கென வாழாது பிள்ளைகளாகிய எங்களுக்காகவே வாழ்ந்தீர்கள் உங்கள் ஆசைகளைப் புறந்தள்ளி பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்ற பாடுபட்டீர்களே அம்மா

எங்கு சென்றாலும் என்னை விட்டுப் பிரிந்திடாமல் கண்ணை இமை காப்பது போல என் கூடவே இருந்தீர்களம்மா உயர் கல்விக்கு எம்மை ஆளாக்கி உயர் கல்விக்கு நாம் சென்ற போது எம் கூடவே வந்து உங்கள் நலனைக்கவனிக்காது நாம் பல்கலைக்கழகமோ அன்றே வைத்தியசாலை பயிற்சிக்கே சென்ற பின் வீட்டில் தனிமையாக இருந்து காலத்தை கழிப்பீர்கள்

நோய் உங்களை தாக்கிய போதிலும் நாங்கள் நேரகாலத்துக்கு உணவு உண்ண வேண்டும் என்பதற்காக விருப்பமான உணவுகளைத் தேடி எமக்கு ஊட்டி விடுவீர்களே அம்மா சிறுகாயப்பட்டாலோ, நோய்வந்தாலோ தாங்கிக் கொள்ள மாட்டீர்கள் என்ன துன்பப்பட்டாலும் எம்மை குணமடைய பாடுபடுவீர்கள். பண்புடனும் பணிவுடனும் வாழ எமக்கு கற்றுத்தந்து நன்மக்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை வளர்த்தெடுத்தீர்கள்.எமது கல்வியில் ஒவ்வொரு படிமுறை வளர்ச்சியும் தேர்ச்சியையும் கண்டு ஆனந்தம் அடையும் முதல் ஆள் எமது அம்மா தான்.

தினம் தினம் நாம் புறப்படும் போது முன்வந்து வழியனுப்பி வைப்பதும் பரீட்சை வேளைகளில் வழியனுப்பும் போது எம்மை விட நீங்களே மனப்பதற்றத்துடன் காண்பதை அவதானித்தேன் அந்தளவு துடிப்புள்ள உள்ளம் இன்றில்லாத பாவியானோம். நாம் பெற்ற கல்விச் செல்வத்தை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அம்மா நீங்களும் கஸ்ட சூழ்நிலையில் வாடிய போதும் எம் உறவுகள் தஞ்சமடைந்த போது அவர்களது கல்வி வளர்ச்சிக்கும் உதவினீர்களம்மா உங்கள் விருப்பை நிறைவு செய்வோமம்மா.

இதுவரை காலமும் எம் உயர்வுக்காக உழைத்து விட்டு எமது பட்டமளிப்பை காண ஆவல் கொண்டிருந்தீரே அதற்குள் உங்களைத் தாக்கிய நோய் தீவிரமானதை தாக்குப்பிடிக்க முடியாது குறுகிய காலத்துக்குள் எங்களைப் பிரிந்து சென்றீரே அம்மா. உங்கள் பிரிவை எமது மனம் ஏற்க மறுக்கின்றது, நெஞ்சு கனக்கின்றது, கண்ணீர் ஆறாக பெருக்கெடுக்கின்றதம்மா.

எங்களை சொந்தக்காலில் நிற்கும்படி ஆளாக்கி நாங்கள் எமது தாய்த் தெய்வத்தை கவனிக்க வேண்டிய நேரத்தில் தான் நோயால் படுக்கையில் அவதிப்பட்டு பிள்ளைகளை நீண்ட காலம் கஸ்டப்படுத்தக் கூடாது என்று எண்ணியா எம்மை விட்டுப்பிரிந்தீர்களம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா நீங்கள் தெய்வத்திற்கு நிகராக வாழ்ந்ததாலா இறைவன் உங்களை விரைவாக தன் பக்கம் சேர்த்து விட்டார் அம்மா இனி எப்பிறப்பில் உங்களை காண்பேனோ

மரணம் வாழ்வின் முடிவல்ல மீண்டும் மீண்டும் பிறப்பு உண்டு அம்மா நீங்கள் எங்கள் குடும்பத்தில் அதே அழகுருவத்தில் வந்து சேர வேண்டுமென்று நித்தமும் வேண்டுகின்றேன் அம்மா

**அன்பு கடைசி மகள்**
**பு.ஜோதிகா**

## மருமகள் புலம்பல்...........

அன்பான மாமியே!
அமைதியின் வடிவமே!
என்ன குறை செய்தோம் என்று -எமை
கண்ணீர் சிந்த விட்டீர்கள்

மருமகள் என்றன்றி மகளாக எனை எண்ணி
கனிவான மொழி பேசி-தினம்
இனிமையாக காத்தீர்கள் -இன்றோ
உங்கள் புன்னகை முகம் காண
விழிநீரால் மலர் தூவி
உங்கள் வரவிற்காய் ஏங்கிடும்-எங்கள்
எதிர்பார்ப்பை நிறைவேற்ற
இவ்வுலகம் வாரீரோ?

**அன்பு மருமகள்**
**மர்மிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து காட்டிய தாய்மை...

திருவாளர். புவனேஸ்வரன் அவர்களின் இல்லறப் பங்காளி அமரர்.கமலாதேவி புவனேஸ்வரன் அவர்கள் இறைபதம் அடைந்தமை எமக்கு ஆழ்ந்த துயரைத் தந்திருந்தது. அவர்கள் எனது வீட்டின் அயலவர்களாக வாழ்ந்த போதும் மனதால் ஒன்றித்த உறவினர் போல் வாழ்ந்த நினைவுகள் இனிமையானவை குடும்பத்தின் குலவிளக்காக, இல்லாட்சியின் இலக்கணமாக திகழ்பவர் 'அம்மா' என்கிற தாய்மையே ஆகும். அத்தகைய தாய்மையின் அடையாளமாக வாழ்ந்தவராகவே அமரர்.கமலாதேவி அவர்களை நான் காண்கின்றேன்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்கின்ற போது தாய்மை உணர்வு தனியிடம் பெறுகின்றது. அதன் பிரதி பலிப்புக்களை அமரர்.கமலாதேவி புவனேஸ்வரன் அவர்களிடம் நான் உணர்ந்தேன் அவரது குடும்பத்தை நாமும் எங்கள் சமூகமும் நன்கு அறிவோம். அவர் குடும்பத்தினரிடையே காட்டிய அன்பு,உறவின் பிணைப்பு,பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அவர் அளித்த அர்ப்பணிப்பக்கள் முன்மாதிரியானவை. திரு.புவனேஸ்வரன் அவர்களது சமூகப் பொது நலப்பணிகளில் அம்மையார் ஊக்கியாகத் திகழ்ந்தார். சரிநிகர் சமனாக அவர்கள் வாழ்ந்து காட்டிய முறையே சமூக கௌரவத்தை அவர்களுக்கு அளித்திருக்கின்றது.

அத்தகைய இல்லற பங்காளியை இழந்து இருக்கும் தருணத்தில் அவர்களின் உளம் ஆறுதலடைந்து தைரியம் பெற்றவர்களாக எதிர் காலம் நோக்கிப் பயணிப்பதே அம்மையாரின் கனவுகளை நிறைவு செய்யும் காரியமாகும். அதற்கான இறையருள் அம்மாவின் குடும்பத்திற்கு கிடைக்க வேண்டும் எனவும் அம்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா அமைதி பெறவும் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

நினைவுகளுடன்
**சிவஞானம் சிறிதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்**
**கிளிநொச்சி .**




**"தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே!**
**தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள**
**வேண்டியது நிறைய இருக்கிறது!!"**
**- லெனின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி அனுதாபச் செய்தி...

மண்ணுலகினில் அவதரித்து உள்ளத்தால் உயர்ந்து உத்தம பணி செய்து வாழ்கின்ற வாழ்க்கையினை அர்த்தமுள்ளதாக வாழ்ந்து மகத்தான மாமணியாக திகழ்ந்தஅமரர்.புவனேஸ்வரன் கமலாதேவி அவர்களின் மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

"மரணம் வாழ்வின் முடிவல்ல" மரணத்தின் பின்னும் சில மனிதர்கள் ஒவ்வொருவர் மனதிலும் வாழ்கின்றார்கள் அவ்வாறே அமரர்.புவனேஸ்வரன் கமலாதேவி அவர்களும் சமூகத்தில் அனைவரினதும் நன்மதிப்பினையும் பேராதரவினையும் பெற்று தன் வாழ்நாளில் சிறந்த குடும்ப பெண்மணியாக திகழ்ந்த பெருந்தகை.

தன் வாழ்வில் ஈன்றெடுத்த பெருமக்களை வைத்தியத் துறையில் பிரவேசிக்க செய்து அரும் பெரும் பணியாம் வைத்தியப் பணிதனை நம் நாட்டிற்கு வழங்கிட வழிவகுத்த உன்னத தாயார்.

'பிறப்புண்டேல் யார்க்கும் இறப்புண்டு' என்பதற்காக விதியின் கணக்கை யாராலும் மாற்றிட முடியாதே அதனால் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தி. இராசநாயகம்**
**முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்,**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவ பேறு பெற்ற திருமதி கமலாதேவி புவனேஸ்வரன்...

வட்டக்கச்சி கிராமத்தை தனது புகலிடமாகக் கொண்டு வாழ்ந்து இல்லறத்தின் நல்லறப்பண்புகளை மற்றவர் வாழ்விற்கு உதாரணமாக்கி விட்டுச்சென்ற அமரர் கமலாதேவி புவனேஸ்வரனின் அந்தியேட்டிக் கிரிகைகயைகளின் போது வெளிவரும் அன்னாரின் நினைவு மலருக்கு எனது சிறுகுறிப்பை வழங்குவதையிட்டு மனநிறைவெய்துகின்றேன்.

1971ம் ஆண்டு நான் கரைச்சி தெற்கு பநோ.கூ சங்கத்தில் பொது முகாமையாளராக சேர்ந்த போது புவனேஸ்வரனின் தந்தையார் சிவக்கொழுந்து அவர்கள் அப்போது நெறியாளர் குழு உறுப்பினராக இருந்தார். அவருடனும் அதன்பின் புவனேஸ்வரன் அதே சங்கத்தில் பணிபுரிந்ததால் அவர்களது தொடர்பும் குடும்ப உறவாக மாறியது 1981ம் ஆண்டில் புவனேஸ்வரன் கமலாதேவியை மணமுடித்த பின்பு கமலாதேவியின் அறிமுகமும் கிட்டியது.

1996ம் ஆண்டு யாழ் இடப்பெயர்வால் எமது குடும்பம் வட்டக்கச்சியில் புவனேஸ்வரன் அவர்களது வீட்டிற்கு மறுபுறத்தில் தங்கியிருந்தோம் அப்போது எமது குடும்ப உறவும் ஒன்றாக பழகும் வாய்ப்பும் கிட்டியது இக்காலத்தில் புவனேஸ்வரனின் மனைவி கமலாதேவியின் குணாதிசயங்கள் எங்களை மிகவும் கவர்ந்தது எனது பிள்ளைகளும் அவர்களது பிள்ளைகளும் ஒன்றாகப் பழகுவதுடன் என்னிடமும் எனது மனைவியிடமும் பாடங்களையும் படித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடக்கம் என்பது கமலாதேவியின் சிறந்த பண்பாகும். அவரது பொதுத்தொண்டும் அவருக்கு இணைந்த இவரது கணவரது செயற்பாடும் அனைவராலும் பாராட்டப்பட்ட விடயமாகும். நாம் அவரது வீட்டுக்கு செல்லும் போது இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அனுப்புவதில் அவருக்கு நிகர் அவராகத்தான் இருக்கும். இறை நம்பிக்கை கூடியவர் அயலிலுள்ள சிறி ரங்கநாதப்பெருமாள் ஆலயத்திற்கு சென்று வருவார் கோயிலிலே தனிமையில் அமர்ந்து கண்ணனைத் தியானித்துக் கொண்டிருப்பார்.ஊரில் துன்ப நிகழ்வுகள் நடந்தால் அவ்விடம் விரைந்து சென்று ஆறுதலளிப்பார். நான் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த 1988-1992 காலப்பகுதியில் இவரது பிள்ளைகள் மூவர் கல்வி கற்றனர். அவரது முயற்சியாலும் வட்டக்கச்சி மகாவித்தியாலய கல்விச் சிறப்பாலும் அவர்களது பிள்ளைகளும் மேன்மையடைந்தது எனக்கு ஒரு தற்பெருமையான விடயம். தான் தனது கணவர் தனது நன்மக்கள் நால்வரது படிப்பு ஆகிய விடயங்களை தனது வாழ்வில் இலட்சியங்களாக வாழ்ந்து காட்டியவர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்பது வள்ளுவர் வாக்கு இவரது வாழ்வின் பயன் அவரது பிள்ளைகளின் வாழ்வுடன் நாம் பார்க்கும் போது நன்கு புலப்படும் தலை மகனான கமலின் தலைமைத்துவ பண்பும் தனது சகோதர சகோதரிகளுக்கு வழிகாட்டிய நெறியும் இதற்கு உதாரணமாகும் தனது கணவன் கூட்டுறவுத்துறை சமூகநலவேலைத்திட்டம் போன்ற பொது வாழ்வில் ஈடுபடுத்துவதற்கு உறுதுணையாக நின்று செயற்பட்டுள்ளார்

இவ்வாறே

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்
மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்" என்ற வள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குக்கமைய தனது பிள்ளைகளில் ஒருவரை முகாமைத்துவ உதவியாளராகவும் ஒருவரை தாதியர் உத்தியோகத்தவராகவும் மற்றும் இருவரை நோயற்ற வாழ்வுக்கு சேவகாரம் மருத்துவ பணிக்கும் தந்து பெருமையடைந்தார். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கு புவனேஸ்வரன் கமலாதேவி குடும்பம் ஒரு தக்க சான்றாகும். தனது குறிக்கோளில் வெற்றி கண்ட கமலாதேவியை அறியாமலே நோய்தாக்கி விட்டது. எதுதான் எப்படி கூறினாலும் எந்த எந்த உயிருக்கும் "பிறப்புண்டேல் இறப்புண்டு" எனும் விடயத்தில் அமைதியடைய வேண்டியவர்களே!

தன்குடும்ப உயர்வுக்கும் ஊருக்குமாக உழைத்து அமரத்துவமடைந்த அந்த உத்தமியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ரங்கநாதப் பெருமாளை இறைஞ்சுகின்றேன்.

**குடும்ப நண்பன்**
**ப.அரியரத்தினம்**
**முன்னாள் வட்டக்கச்சி மத்தியகல்லூரி அதிபர்,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**இந்நாள் வடமாகாண சபை உறுப்பினர்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி இரங்கல் செய்தி...

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் -வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்ற தெய்வீகப் புலவர் திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க எம் மண்ணுலகில் வாழ்ந்த பெருமகள் அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி அவர்களின் திடீர்மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. எனினும் "பிறப்புண்டேல் யாவருக்கும் இறப்பு உண்டு"என்ற உலக நியதிக்கு இணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்

செய்வன திருந்தச்செய் என்பது போல தன் கடமையை கண்கண்ட தெய்வமாகக்கொண்டு சமூகப்பற்றாளனாக தன்னை அர்ப்பணித்த இவர் ஓர் ஆறாத சமயப்பற்றுமிக்கவர். தன் வாழ்நாளை சமூகத்திற்காக அர்ப்பணித்து வாழ்நாளை வீணாக்காது வாழ்ந்து வந்த உத்தமி. சமூகத்தில் நிகழும் எந் நிகழ்விலும் கலந்து சிறப்பித்து நிகழ்வினைத் தழைத்தோங்கச் செய்வதில் மிக்க வல்லவர். "யாவராயினும் நா காக்க" என்ற வள்ளுவர் வாக்கிற்கு தன்னை நியாயப்படுத்தி தான் பேசும் வார்த்தைகளால் மற்றவர் மனதுபுண்படாது பேசும் திறன்படைத்தவர்.

கடமையே கண்ணாகக்கொண்டு செயற்பட்ட அவர் மட்டுமல்லாது தன் குடும்பத்தினரையே சமூகப்பணியுடன் ஒன்றிக்க செய்து கடமையைப் புரிந்தமையானது மிகப்பெரிய சேவையாகும். எமது ஈழத்திரு நாட்டில் தன் உத்தம புத்திரர்களை அர்ப்பணிப்புமிகு வைத்திய பணிதனில் ஆளாக்கி விட்ட உத்தம தாய் என்ற நிலையெண்ணி நாம் பெருமையடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் காலம் பாராது இறைபணி செய்து எந்தவித இடருமின்றி சிவனுடன் சேர்ந்து கொண்ட உத்தமி.

"ஆண்டாண்டுகாலம் அழுதுபுண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்-வேண்டா!
நமக்கு அதுவழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்"

அதனால் அவர்தம் பிரிவுக்காக எம் இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா இறைவன் திருவடியில் சங்கமமாகி நிலைத்து நிற்க ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

பொன்.நித்தியானந்தம்
ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர்,
செயலாளர்
மகாதேவ சுவாமிகள் சிறுவர் இல்லம்,
கிளிநொச்சி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mr. M. Kanapathipillai, MA, SLEAS**

Rtd. Deputy Principal, Royal College, Colombo – 07

Chairman, Palmyrah Development Board, 244, Galle Rd, Colombo – 04

No. 24/3 1/1, Frank Furd Place, Colombo – 04

Tel: 011-2594204, 0773-449678

E-mail: kanapathipillai19@hotmail.com

## மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த மாதரசி...

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்"எனப்படும்.தான் தனக்கென வாழாப் பிறர்க்குரியவராய் வாழ்பவர் சிலரே. அவ் அடிப்படையில் தான் கரம் பற்றிய புவனேஸ்வரனின் எல்லா நடவடிக்கைக்கும் பின்புலமாக இருந் அவரையும் அவரின் குழந்தைகளையும் நெறிப்படுத்தி மாசில்லா மாணிக்கமாகத் திகழ்ந்தவர் திருமதி புவனேஸ்வரன் கமலாதேவி.

கூட்டுறவுப் பாடசாலை விரிவுரையாளராக கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராக, வட்டக்கச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய அறங்காவலர் சபைத் தலைவராக மற்றும் செயலாளராக,வட்டக்கச்சி கிராம அபிவிருத்திச் சபைத் தலைவராக என பல்துறை ஆளுமையுடன் பொதுப்பணியில் ஈடுபட்டு வாழ்ந்த அன்பர் புவனேஸ்வரன் அவர்களின் பின்புலத்தில் நின்று அவரை பொதுப்பணிகளில் ஈடுபட வைத்துவிட்டு பிள்ளைகளைப் பராமரித்து வீட்டு நிர்வாகத்தையும் சிறப்பாக நடாத்தினார்.

'தக்கார் தாவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது திருவள்ளவர் கருத்தாகும் பிள்ளைகள் இருவரை வைத்தியராக்கி மற்றைய பிள்ளைகளையும் படிக்க வைத்து சபை நடுவே முந்தியிருக்க வைத்த பெருமையில் அன்னையின் பங்களிப்பு அளப்பரியது

எல்லோருக்கும் நல்லவராக ஆண்டவன் கூட இருக்கமாட்டாத உலகில் தான் பழகிய எல்லோருக்கும் நல்வராக வாழ்ந்தார். தனி மனித நடத்தையிலும் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66ஆண்டுகள் மட்டுமே இப் புவி வாழ்வில் ஈடுபட்ட அவர் தான் வாழ்ந்த காலத்திற்கு அர்த்தம் சேர்த்து விட்டு காலமானார் தாய் கொண்டு வந்ததை தாலாட்டி வைத்ததை நோய் கொண்டு போகும் கொடுமையை எண்ணும் போது "சாவே உனக்கு சாவு வராதா"என்ற வரிகளை மீள வாசிக்கச் சொல்கின்றது.

"பண்புடையார் பட்டுண்டுலகம்" என்ற பொன்மொழிக் கிணங்க பண்புடன் வாழ்ந்து வந்த காலத்திற்கு அர்த்தம் கற்பித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அந்த மதராசிதெய்வத்துள் ஒன்றாக நித்தியத்தில் இளைப்பாறுவார்.

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தலைவர் புவனேஸ்வரன் மற்றும் அவரின் பிள்ளைகளின் துயருக்கு அனுதாபங்களை மட்டுமே எம்மால் வழங்க முடியும். இன்னும் சிறிது காலம் பிள்ளைகளுடனும் பேரக்குழந்தைகளுடனும் கொஞ்சிக் குலாவும் அந்த இன்பத்தை இழந்து போன அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**என்றும் அன்புடன்**
**மா. கணபதிப்பிள்ளை**

நாளைக்கு நல்ல காரியம் செய்வேன்
என்று சொல்பவன் முட்டாள்
அறிவுள்ளவன் நேற்றே
அதைச் செய்து முடித்திருப்பான்!
- மார்ஸல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி...

திரு.சிவக்கொழுந்து புவனேஸ்வரன் அவர்களின் துணைவியார் கமலாதேவி அவர்கள் திரு.புவனேஸ்வரன் அவர்களது முன்னேற்றத்திற்கும் பொதுப்பணி வேலைகளுக்கும் உந்து சக்தியாக நின்று செயற்பட்டவர்.

திரு.புவனேஸ்வரன் ஒரு பொதுப்பணி சேவையாளன் அவரது இந்த பொதுப்பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தவர். அவரது துணைவியார் கூட்டுறவு அபிவிருத்தித் துறையில் அவரது பணிகாத்திரமானதாகும். நானும் கூட்டுறவுப்பணியில் இருந்த காலத்தில் இருந்து அவரது பணிகளை கண்டு வந்திருக்கின்றேன். யுத்த காலத்தில் பொதுமக்களுக்கான உணவு விநியோகத்தில் முன்நின்று உழைத்திருக்கின்றார்.

இதனை விட கிளிநொச்சி புழுதி ஆற்றின் நிர்மாணத்திற்கு காரண கர்த்தாவாக இருந்து அதன் வரலாற்றில் தனது பங்கினைச் செலுத்தி இருக்கின்றார். உயர் நெறிக் கொள்கைகளைப் பின்பற்றி வரும் திரு.புவனேஸ்வரன் தனது பிள்ளைகளையும் சிறந்த முறையில் வளர்த்து அவர்களை வைத்தியர்களாகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் ஆக்கி இருப்பது சமூகத்தை மட்டும் நேசிக்காமல் தனது குடும்பத்தினையும் நேசித்திருக்கிறார். இத்தகைய சிறந்த ஒழுக்கப் பண்பாளனாக இவரது அனைத்து முயற்சிகளுக்கும் உற்ற துணையாக இருந்தவர். அவரது துணைவியாராகும். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கோ.நாகேஸ்வரன்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், கரைச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

இரணைமடு திருவருள்மிகு

# கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

Iranaimadu Thiruvarulmiku

# KANAKAMBIKAI AMBAL TEMPLE TRUST BOARD

Website : www.srikanakampikai.com Tel : 021 230 0262 பதிவு இல / Regd No } HA/5/KL/81

Date :.......................

## கமல தீபம் நின் சந்நிதியில் சுடர் விட்டு ஒளிரட்டும்

"அரிய தொன்றுளதோ அம்மா ஆணவ மலத்ததைப் போக்கி
உரிய நற்பாதமீது உவப்புடன் தொழுவோர் கென்றும்
பரிய நின் நயனம் காட்டி பரவெளி ஆள செய்யும்
அரிவையே கனகாம்பிகா கமலதீபமாய் ஏற்றிவையே"

அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி நல்ல இல்ல கிளத்தியாய் நல்மக்களைப் பெற்று அவர்களை அவையத்து முந்தி இருக்க செய்த பெருமாட்டி.

திரு.புவனேஸ்வரன் கூட்டுறவுப் பணிகளையும், சமூக சமய பணிகளையும், புழுதியாறு குளம் உருவாவதற்கும், கரைச்சி தெற்கு / கிழக்கு ப.நோ.கூட்டுறவு சங்க வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து சேவையாற்ற உந்து சக்தியாக அமைந்தவர் அமரர் கமலா.

இவருடைய கணவர் இப்பணிகளில் ஈடுபட மக்களை வைத்தியர்களாக, தாதியாக, முகாமைத்துவ பணிகளாற்ற ஆக்கிய பெருமையும் இவருக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய மாமனார் அமரர் சிவக்கொழுந்து கனகாம்பிகை அம்பாள் மீது மிகுந்த பக்தி கொண்டவர்.அக்காலத்தில் அம்பிகையின் திருவூர்வலத்தில் இவருடைய உழவு இயந்திரம் 36ஸ்ரீ 1176செய்த பணி அளப்பரியது.அமரர் சிவக்கொழுந்து இவ்வாலய அறக்காவலர் சபை ஆரம்ப கால உறுப்பினர் இவருடைய மாமனார் செய்த பணியை திரு.புவனேஸ்வரனும் இவ்வாலய அறங்காவலர் சபையில் 1984-1985 ஆண்டு காலப்பகுதியில் உபதலைவராக இருந்து பணியாற்ற கமலா அம்மையார் உறுதுணையாக இருந்தார்.

இவருடைய ஆன்மா என்றும் கனகாம்பிகையின் தாயின் சந்நிதியில் கமலதீபமாக சுடர் விட்டு பிரகாசிக்க அன்னையை பிரார்த்திக்கின்றோம்.

"அன்னையின் அருள் அகிலமெல்லாம் ஆளும்"

**எஸ்.என் செல்வராசா**
**தலைவர்**
**இரணைமடு திருவருள் மிகு**
**கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவரை நீள் புகழ் ஆற்றின் புலவரைப் போற்றாது புத்தேள் உலகு.....

கமல மலர் மலர்ந்ததால் தனியழகு! அவ்வழகிலே மயங்காத மனிதர் இல்லை அமரர்.புவனேஸ்வரன் கமலாதேவி அவர்களும் பெயருக்கேற்ற கமலமே! புன்னகை ஒன்றே அவர் தம் புனித மொழி! அவரின் பேரழகும்,நன்னடையும் கண்டு பூமாதேவியே பொறாமைப்பட்டிருப்பாள்.

பக்தியும் பண்பும்,பேரன்பும்,குடும்பப்பாங்கும் எல்லோர்க்கும் ஒரு சேர வாய்த்திட்டது என்பர் அது கமலாதேவி அன்னைக்கு இறைவன் கொடுத்த பெரும் வரம் மண்ணிலே வாழ்ந்த பெருவாழ்வு கண்டு இறைவனுக்கும் பேராசை வந்து விட்டது.போலும் தனக்குப் பணி செய்யத் தகுந்த வனிதை இவரென்றே எண்ணினனோ? ஏதுமறியோம் என் செய்வோம்!

இவ்வுலகிலே பிறப்பொடு பிறந்து மரணம் மட்டுமே சாவு தவிரப் பிறிதொன்றும் நிச்சயமில்லை எனினும் தான் பெற்ற பிள்ளைகளையும் பேரன்புக்கணவரையும் கூடி வாழ்ந்த உறவுகளையும், பாசத்திற்குரிய அயலவர்களையும் தவிர்க்க விட்டுச் சென்ற பேரிழப்பால் துவளும் அனைவரது உள்ளங்களும் சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக அன்னாரின் ஆத்மா சாந்தியுறுவதாக!

**திருமதி சண்முகராஜா மணிமேகலை**
**உள்ளூராட்சி உதவியாளர்**
**பிரா.உள்ளூராட்சி உதவியாளர் அலுவலகம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரிய தாய் அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன்"எனக் கேட்ட தாய் இவ் உவமைக்குரியவர் இறைபதம் அடைந்த திருமதி கமலாதேவி புவனேஸ்வரன் அவர்கள் இயற்கை எழில் பொங்கும் வட்டக்கச்சிக் கிராமத்தில் எளிமையான குடும்ப வாழ்க்கையில் இணைந்து நான்கு மழலைகளைப் பெற்றெடுத்த பாக்கியவதி. இவர் இக் குழந்தைகள் சிறு வயதிலிருந்தே வட்டக்கச்சி ம.வி இல் கல்வி பயின்று உயர் தரம் வரை கல்விக்காக அர்ப்பணித்து மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள்

கொடிய யுத்தத்திலும் பொருளாதாரத்தடைகளின் மத்தியிலும் சிரத்தையுடன் கல்வி கற்று எமது வித்தியாலயத்திற்கும் இந்த மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் செல்வன் பு.தர்மீசன், செல்வி பு.யோதிகா ஆகியவர்கள் மருத்துவத்துறையில் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றமையும் செல்வி பு.மயூதரனி மருத்துவத்துறைசார் பயிற்சி மேற்கொண்டு சொந்த மாவட்டத்திலே தாதியராக பணிபுரிந்துள்ளார்

செல்வன் பு.கமலேசன் வணிகக்கல்வி கற்று இன்று முகாமைத்துவ உதவியாளராக சேவைபுரிகின்றார் இத்தாயானவள் மற்றவர்களால் போற்றப்பட வேண்டியவள் என்பதற்கு தக்க சான்று பகிர்கின்றன .

அன்னாரது பிள்ளைகள் எமது பாடசாலையில் கல்வி கற்று உயர்ந்து நிற்பது போன்று கிளி. வட்டக்கச்சி மகாவித்தியாலயம் இன்று கிளி. வட்டக்கச்சி மத்திய கல்லூரியாக உயர்ந்து நிற்பதில் பெருமையடைகின்றது.

**அதிபர்**

**கிளி வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாள் உருவில் வந்தவரே எங்கு சென்றீர்...

தன் பெயருக்கே உவமையாகி தன் புன்னகையை சொல்லாக்கி எம் ஊர் எங்கும் நிறைவாக சிறப்பாக உயிர் வாழ்ந்த அன்ரி!

ஓம் அப்படியா? ஆ, அதுக்கென்ன? அதுநல்லது சரி சரி, இருக்கு, தாரேன் இப்படியான வார்த்தைகளை இனி எங்கே எப்போ கேட்போம் கிருபானந்த பாரியாரின் இவ்வார்த்தைகளே வாழ்விற்கு இனிமை தரும்.இவ்வார்த்தைகள் கமலாதேவி அன்ரியிடம் கண்டேன் இவையில்லாமல் இல்லை, போ, தெரியாது, மாட்டேன் என்ற ஒவ்வாத வார்த்தைகள் நான் என்றும் அன்ரியிடம் கேட்டதில்லை.

வட்டக்கச்சியில் மாயவனூர் பதியில் அவரின் நண்பர்களாகி அவர் அமரத்துவம் அடையும் வரை ஒரு தாய் மக்கள் போலவே பழகினோம் எந்த நிகழ்ச்சியிலும் தேடிக் கண்டு பிடித்து அருகில் அமர்ந்து விடுவோம் துன்ப துயரங்கள் நிறைந்த காலமெல்லவா இக்காலம் எல்லாத் துன்பங்களையும் மறந்து தன்னவரின் செயற்பாடுகள், மழலைகளின் செயற்பாடுகளைச் சொல்லி மனமாறுதலடைவார்.

இவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பம் அன்ரியின் விடாமுயற்சி தூரநோக்கு அயராத உழைப்பின் பலன் தான் அவரது பிள்ளைகள் மூவர் மக்கள் சேவையில் நிகரில்லாத மருத்துவ சேவை அன்ரியின் மூத்தவர் தலைமைத்துவ பண்பாளன் தனது இளையவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவியதுடன் அரசசேவையாளராகி விட்டார். துன்ப துயரம் நீடித்த இக்கால இடைவெளியில் பிள்ளைகள் சிறியவர்களாக சிறுவர் பாடசாலைகளில் கற்ற போது அன்ரியின் இளைய மகன் தர்மீசன் (தற்போது வைத்தியர்) கரைச்சி பிரதேச சபையின் சிறுவர் பாடசாலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிஞ்சுக்கரத்தால் பிள்ளையார் சிலை வடித்துக் கொடுத்த நிகழ்வு இன்றும் என் மனத்தில் நிலைத்து நிற்கின்றது. கடைக்குட்டி யோதிகா தனது இளமை வயதில் சிறந்த பெறுபேறு பெற்று மாவட்டத்தில் முதல் நிலை பெற்று மருத்துவப் படிப்பிற்கு சென்று இன்று இறுதியாண்டு மாணவியாக முன்னிலையில் உள்ளார் கணவர் பணி பிள்ளைகளது படிப்பிற்கு துணையாக நின்று யாவும் கனிந்து வரும் வேளையில் தான் தொற்றா நோய் ஏற்பட்டுவிட்டது.

பிறப்புக்கு பின் இறப்பு நிட்சயம் என்று அடிக்கடி கூறும் இவர் நல்ல ஒரு சந்ததியை உருவாக்கி அழியாத புகழுடன் என்றும் நிலைத்திருக்கக் கூடிய நினைவுடன் படுக்கை யென்றும் நீடிய பராமரிப்புக்கும் வழிவிடாது துர்முகி வருடம் சித்திரைமாதம் 24ம் திகதி துதிகை திதியில் அமரத்துவமடைந்து விட்டார்

"அம்பாளின் வடிவானவர் அவரிடம் சென்று விட்டார்"
"மரணம் வாழ்வின் முடிவல்ல" மீண்டும் எம்மிடம் வருவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திருமதி. சித்திரா பரமேஸ்வரன்**
**ஓய்வு நிலை ஆயுர்வேத டாக்டர்**
**கரைச்சி பிரதேச சபை**

யோசிக்காம் நாம் செய்யும்
ஒவ்வொரு செயலுக்கும்.
வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் யோசிக்க
வேண்டியிருக்கும்

**-சுவாமி விவேகானந்தர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தேவி மாமி ....

உயிரும் உணர்வும் உருவமில்ல நினைவுகளும்
கருகும் பொழுதுகளும் கண்ணுள் நிறை கற்பனையும்
எண்ணமதில் மின்னும் எண்ணரிய சிந்தனையும்
எல்லாமாய் எம்முன் நிறைந்த எங்கள் மாமி

மாமி என்ற சொல்லின் மறு வார்த்தை -எம்
மாதாவாய் எமைக்காத்து எங்கள்
கல்விக்காய் தோள் தந்து காரியங்கள் பல செய்து
வளமாக எமை வாழ்வித்து
வழிவகைகள் பல செய்து எத்தனை உதவிகள் அத்தனையும்
எண்ணிலடங்காது

அழகான உடைகள் அன்பான உணவுகள்
அத்தனையும் எமக்காக நிறைவாக தந்தீர்கள்
எத்தனை நினைவுகள் நீங்காமல் தந்தீர்கள்
சத்தமேதுமின்றி எம் சித்தமது கலங்கிட சென்றதேனோ

அன்னமிட்ட உன் கையை அன்புடன் தேடுகின்றோம்
எண்ணம் முழுவதும் வலிமிக சொல்லாமல் அழுகின்றோம்
வண்ணமிகு சித்திரமாய் வடிவான எம் தேவி மாமி
இன்னொருவர் எமக்கென்றும் இல்லையே உம்மைப்போல்

**மருமக்கள்**
**மஞ்சுளா, சுசி, தர்சினி, கஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பாசம் நிறைந்த சித்தி...

அன்று எனக்கு நான்கு வயது எனது பெற்றோர் எனது கல்வி உயர்வடைவதற்காக திரியாய் கிராமத்தில் இருந்து கட்டபிராயிலுள்ள அம்மம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் அங்கு மணியமாமா,சிவம்மாமா,மணிச்சித்தி,தேவிச்சித்தி என நால்வர் இருந்த போதும் தேவிச்சித்தியுடன் அதிககாலம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்றைய காலத்தில் (1964) பாலர் பாடசாலைகள் இல்லாததால் வீட்டில் சித்திகளுடன் எனது முழுநேரமும் கழிந்தது நான் சிறுவயதில் மிகுந்த குழப்படிக்காரனாக இருந்த போதும் தேவிச்சித்தியே என்னை பாசத்தோடு அரவணைத்தவர் பின்னர் பாடசாலை செல்லத் தொடங்கிய போதும் எனது ஆரம்பக்கல்வி முழுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தவர் சித்தியே. இவ்வாறு நான்கு வருடங்கள் அவர்களுடன் இருந்த காலத்தில் எனக்கு அன்னைக்குச்சமமாக இருந்து குளிப்பாட்டுவதில் இருந்து உணவளிப்பது வரை பாசத்தைக்காட்டி வளர்த்தவர் நான் அன்று பார்த்த சித்தியின் அழகிற்கு யாருமே இணையாக நிற்க முடியாது அவரது அன்பு கண்டிப்பு,சிரிப்பு இவையெல்லாம் என்றும் நெஞ்சைவிட்டகலாதவை

ஆரம்பக் கல்வியை முடித்து வீடு திரும்பி மீண்டும் பல்கலைக்கழகம் சென்று கல்வியை முடித்த பின்னர் சொந்த ஊரிற்கு செல்ல முடியாத யுத்த சூழ்நிலை காரணமாக மீண்டும் வட்டக்கச்சியில் சித்தியிடம் தஞ்சம் புகுந்தேன். அக்காலத்திலும் சித்தியும் சித்தப்பாவும் என்னை தமது பிள்ளைகளில் ஒருவராக அன்பைக்காட்டி அரவணைத்தனர். எண்ணற்ற துன்பங்கள் துயரங்கள் வந்த போதிலும் துவளாமல் துணிந்து நின்று பிள்ளைகளின் கல்வியை உயர்த்திய உத்தம தாயாவார் எம் சித்தி உங்களிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஆயிரம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியின் சுகயீனத்தை அறிந்த நாள் முதல் தினமும் இறைவனை வணங்கிய போதும் அவரது உயிரை காப்பாற்ற இறைவன் துணை புரியவில்லை சித்தியின் மறைவு எனது அம்மா உட்பட குடும்பத்தினர் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் சித்தியின் பிள்ளைகள் மன ஆறுதலுடன் வாழ இறைவன் அருள் புரிய வேண்டும்.

எனது ஆழ்ந்த மனத்துயரால் உண்டாகும் கண்ணீரை உங்கள் பாதக்கமலங்களில் சிரத்தையுடன் அஞ்சலியாக கழுவுகின்றோம்.

**என்றும் அன்பு சிரத்தையுடன்**
**பெறாமகன் உதயன்**
**ஆசிரிய ஆலோசகர்**
**அட்டன் கல்வி வலயம்**

நாம் - முதல் தலைமுறை
தந்தை + தாய் - இரண்டாம்
தலைமுறை
பாட்டன் + பாட்டி - மூன்றாம்
தலைமுறை
பூட்டன் + பூட்டி - நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி - ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயோள் - ஆறாம்
தலைமுறை
பரன் + பரை - ஏழாம் தலைமுறை
பரன் + பரை = பரம்பரை
ஒரு தலைமுறை - சராசரியாக 60
வருடங்கள் என்று கொண்டால்,ஏழு
தலைமுறை - 480 வருடங்கள்..ஈரேழு
தலைமுறை - 960 வருடங்கள்..
(கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்)ஆக,
பரம்பரை பரம்பரையாக என்று
சொல்வதன் பொருள் ஈரேழு,
பதினான்குதலைமுறையாக என்று
பொருள் வரும்.
வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு
முறைகள் இல்லை..
இதுவும் தமிழுக்கு ஒரு தனிச் சிறப்பு!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறவாத சகோதரியின் ஆதங்கம் ....

எனது தாயும் உமது தாயாரும் இரட்டையர்கள். அன்றில் இருந்து இருதாய்ப் பிள்ளைகளான நாமும் இணைந்தல்லவோ வாழ்ந்தோம். யுத்தச் சூழலிலும் இடப்பெயர்ந்து சென்று புனர்வாழ்வுக் குகைகளிலும் ஒன்றித்தல்லவோ வாழ்ந்தோம். துன்பதுயரங்களைச் சுமந்தாலும் உன் கணவன் என் மைத்துனரின் உயர்வுக்கும் உன் பிள்ளைகள் என் பிள்ளைகளின் வளர்ச்சிக்குமாகவே உம்மை உருக்கி வாழ்ந்து காட்டினாயம்மா.

கல்விக்கு உமது பிள்ளைகளை மட்டுமல்ல அயலார் பிள்ளைகளையும் உயர்வடையச் செய்தாயம்மா. என் பேரப் பிள்ளையையும் உன் உடன் இருத்தி பாடம் சொல்லி உயர்தரக கல்வி வரை உயர்தினாயம்மா.

எல்லாம் கனிந்து வரும் வேளையில் உன் கணவர், நன்மக்கள் உன்சுற்றத்தவர்களையும் விட்டல்லவோ மாயமாகி விட்டாயம்மா.

நோய் வாய்பட்டதாகக் கேட்டு ஓடோடி வந்து உன்பணி செய்தேனம்மா. நான் உன்னடி வந்து சேரும் வரை உன் நன்மக்களின் பணியைத் தொடருவேன்.

என் அன்புச் சகோதரியின் அழகும் பணிவும் நற்சிந்தனையும்என் மனத்தில் நித்தமும் நிழலாடுகின்றது.

**மலர் அக்கா**

**புதுக்குடியிருப்பு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல்வீட்டுச் செல்வங்களின் ஆதங்கம்

எமதருமை தேவி அன்ரியே
மின்னாமல் முழங்காமல் எமைவிட்டு
சென்றதேனோ அன்ரியே?
உங்கள் நினைவுகள் என்றும்
எமைவிட்டகலாது.
எம்மீது அன்பை வைத்தீர்களே
எமை விட்டுப் பிரிய மனம் வந்ததேனோ?
கல்வியே சிறந்த செல்வம் என்று சொல்லி
எங்களுக்கு நல்வழி காட்டினீரே
எங்கள் எல்லோருடனும் இருக்காமல்
பாதிவழியில் சென்ற காரணம் சொல்லீரோ?
என்றும் உங்கள் அறிவுரையை பின்பற்றி
வாழ்வோம் தேவி அன்ரி

**என்றும் உங்கள் செல்வங்கள்**
**சிவசக்தி, சிவசங்கர்,**
**சகானா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை அரவணைத்து வளர்த்த தேவி அன்ரி

மானிடப் பிறப்பில் பிறப்பும் இறப்பும் என்பது உலக நியதி. இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து தனது குடும்ப உறவினர், ஊரார் எல்லோருக்கும் நல்லதைச் செய்தே இன்று. அமரத்துவம் அடைந்து விட்டார். அன்ரியினது வாழ்வியல் திட்டமிடலில் எத்தனையோ தடைகள் வந்தாலும் பொறுமையுடன் வெற்றி கண்டுள்ளார். சாந்த குணமும் மற்றவர்களை உபசரித்தல் போன்ற பண்புகளை என்றும் காண்பேனோ.

நாட்டிலே அசாதாரண நிலை இடப்பெயர்வு அன்ரியிடம் அபயம் தேடி ஓடுகின்றோம். தனது பிள்ளைகளுடன் எம்மையும் சேர்த்து ஒரு தாய் பிள்ளைகளாகவே வளர்க்கின்றார். தனது உறவினர்களின் சுகதுக்கங்களில் அன்ரியின் பிரசன்னமும் அவரது உதவியும் நிட்சயம் இருக்கும் .அன்ரி. இன்னமும் கொஞ்சக் காலம் இருந்திருக்கலாம். என்செய்வது அவரைப் பிடித்தா தொற்றாநோய் விடவில்லை. வாழ்க்கைச் சக்கரத்தில் எமது சமுதாயம் சீரழிந்த மூன்று சகாப்த காலத்துக்குள் தனது பிள்ளைகள் நால்வரையும் உயர்ச்சியடையத் திட்டமிட்டு செயற்பட்டுள்ளார்.

எனது சித்தப்பாவின் சமூகசேவை, கூட்டுறவுத்துறை, சமாதான நீதவான் பணி பார்க்கும் போது அவருக்கு பின்புலமாக இருந்து உழைத்து அவரது கௌரவத்துக்கும் உறுதுணையாக இருந்துள்ளார். மனிதவாழ்வுக்கு ஆதாரமான மருத்துவத்துறைக்கு தனது மூன்று செல்வங்களை வளர்த்தெடுத்து அவர்களது உயர்ச்சி கண்டு திருப்பதி கண்டவர். முழுமையான பயனை அடைய முன் அமரத்துவமடைந்து விட்டார். மீண்டும் பிறப்புண்டேல் எம்மிடம் திரும்பி வருவார். என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

**ஜெகதீஸ்வரன் ரூபிகாசன்**

**இல:9 /1, திருவையாறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு தகவல்கள்

புற்றுநோயின் தாக்கமானது இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மூன்றிலொரு வீதமான புற்றுநோய்களை எமது வாழ்க்கையை ஆரோக்கியமான முறையில் அமைத்துக் கொள்வதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். அது போல் மூன்றிலொரு வீதமான புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதன் மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம் என்பதால் புற்று நோய் ஆபத்துக் காரணிகள், புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும். எனவே தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வினா விடைவடிவில் கீழே தரப்பட்டுள்ளன.

**புற்றுநோய் என்றால் என்ன?**

மனித உடலின் அடிப்படை மூலக்கூறான கலம், சாதாரண பிரிகைப் பொறிமுறையை விடுத்து, அசாதாரணமானதும், ஒழுங்கற்றதும், நோக்கமில்லாததுமான கலப் பிரிகைக்கு உட்படும் கலப்பிரிகைப் பொறி முறையே புற்றுநோய் எனப்படுகின்றது.

**பெண்களில் அதிகளவில்,**

1. மார்பகப் புற்றுநோய்.
2. கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்.
3. சூலகப் புற்றுநோய்.

**ஆண்களில் அதிகளவில்,**

1. வாய்ப் புற்றுநோய்.
2. சுவாசப்பைப் புற்றுநோய்.
3. களப் புற்றுநோய் என்பன காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுத்துக் கொள்ளக்கூடிய புற்றுநோயைத் தடுத்துக்கொள்ளல்

புற்றுநோய்களில் மூன்றிலொரு வீதமானவற்றை எங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான முறையில் அமைத்துக் கொள்வதன் மூலம், தவிர்த்துக் கொள்ளலாம்!

புற்றுநோய் சம்பந்தமான ஆபத்துக் காரணிகளை தவிர்ப்பதன் மூலம் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ள முடியும்

## புற்றுநோய் சம்பந்தமான ஆபத்துக் காரணிகள் யாவை?

### 01. புகையிலை பாவித்தலும் சிகரெட் புகைத்தலும்

இவை, இருதய நோய்கள், சுவாச நோய்கள், பாரிசவாதம் மற்றும் புற்றுநோய் என்பவற்றை ஏற்படுத்துகின்றன.

- வாய், மூக்கு, தொண்டை, குரல்வளை, நுரையீரல், உணவுக்கால்வாய், இரைப்பை, பெருங்குடல் மற்றும் மலவாசலில் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன.
- புற்றுநோய் ஏற்படாது காத்துக்கொள்ளப் பிரதானமானது புகைத்தலையும், புகையிலை, சிகரெட் பாவிப்பதையும் தவிர்ப்பதாகும்.
- வராது தடுத்துக்கொள்ளக்கூடிய புற்றுநோய்களில், 50 வீதமானவை புகைத்தல் மற்றும் புகையிலை, சிகரெட் சம்பந்தப்பட்ட தயாரிப்புக்களைப் பாவிக்காமல் இருப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

### 02. வெற்றிலை மெல்லுதல்

வெற்றிலைச் சுருளிலுள்ள புகையிலை, பாக்கு, சுண்ணாம்பு என்பன வாய், தொண்டை, களம் மற்றும் உணவுக்கால்வாயில் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. பாக்கு(பாக்குப் பக்கற் மற்றும் பாபுல் என்பன) பாவிப்பதும் வாய்ப் புற்றுநோயை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. மதுபானம் பாவித்தல்

மதுபானம் அருந்துவது வாய், தொண்டை, குரல்வளை, இரப்பை, ஈரல், பெருங்குடல் மற்றும் மார்பகம் என்பவற்றில் புற்றுநோயை ஏற்படுத்தும்.

**மதுபானம் பாவிப்பதால் புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகின்றது?**

மதுபானத்திலுள்ள இரசாயனப் பதார்த்தங்கள், வாய், தொண்டை, உணவுக் கால்வாய்த் தொகுதி, கருவிலுள்ள பாரம்பரிய நிறமூர்த்தங்களில் விகாரங்களை ஏற்படுகின்றன. இவ் விகாரங்கள், புற்றுநோய் ஏற்பட மூலகாரணமாகின்றன.

எனவே நீங்கள் மதுபானம் அருந்துபவர் எனில் அதிலிருந்து உடனடியாக மீளுங்கள். நீங்கள் இப்பொழுதும் மதுபானம் அருந்தாதவர் எனில், அந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள்.

## 04. ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள்

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் வாய், இரைப்பை, பெருங்குடல், மற்றும் மார்பகம் போன்ற அங்கங்களில் புற்றுநோய் ஏற்படக் காரணமாக அமைகின்றன. சுகாதாரமான, சமச்சீர் உணவுகளை, சரியான உணவு வேளைகளில் உண்பதன் மூலம், புற்றுநோய் உட்பட மற்றைய தொற்றா நோய்கள் (Non Communicable Diseases) சம்பந்தமான ஆபத்து நிலைமைகளையும் குறைக்கலாம்.

**ஆரோக்கியமான சமச்சீரான உணவு எப்படி இருக்க வேண்டும்?**

- வெவ்வேறு சுவையுடைய, வெவ்வேறு நிறமுடைய மரக்கறிகள், பச்சை இலைக்கறி வகைகள், பழவகைகள் உள்ளடக்கிய உணவுகள்.
- உயரத்திற்கேற்ற நிறை இருக்க வேண்டிய பிரமாணத்துக்கமைய (BMI) மாவுச் சத்து அடங்கிய உணவுப் பதார்த்தங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைக்கலோரிப் பெறுமானத்தை நிலை நிறுத்துவதற்காக தேவையான அளவில் அல்லது பரிந்துரைக்கப்பட்ட அளவில் உள்ளெடுத்தல்.

- நிரம்பிய கொழுப்புணவாகிய மீன் போன்ற உணவு வகைகளை அதிகளவில் உள்ளெடுத்தல்.
- சமைப்பதற்கு முன்பாக இறைச்சியின் தோல், கொழுப்புப் பகுதி போன்றவற்றை நீக்க வேண்டும்.
- ஏற்கனவே சமைத்த உணவு வகைகள், சோஜேசஸ், மீற் போல் போன்றவற்றைத் தவிர்த்தல்.
- சீஸ், பால், பட்டர் போன்ற கொழுப்பு கூடிய உணவு வகைகளைத் தவிர்த்தல்.
- எண்ணெய், சீனி, உப்பு போன்றவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்தல்.

## 05. உடற் பயிற்சி செய்யாமை

ஒழுங்காக உடற் பயிற்சி செய்வதால் ஏற்படக்கூடிய தொற்றா நோய்கள், பெருங்குடல், மார்பகம், கருப்பைப் புற்றுநோய் போன்றன ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

- சிறுவர்கள், இள வயதினர், நாளாந்தம் ஒரு மணித்தியாலம் அளவில் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.
- வயது வந்தவர்களும் முதியவர்களும் நாளாந்தம் 30 நிமிடப்படி கிழமைக்கு 5 தடவைகள் வியர்வை சிந்தக் கூடிய உடற் பயிற்சியில் ஈடுபடல் வேண்டும்.
- ஒரேயடியாக ஒரு மணித்தியாலம் உடற் பயிற்சி செய்ய முடியாதவர்கள், 15 நிமிட இடைவெளி விட்டுத் தொடரலாம்.

## 06. மன உளைச்சல்

அதிகமான மன உளைச்சல், உடம்பின் நோய் எதிர்ப்பு நீர்ப்பீடனத் தொகுதியில் பாதகமான முறையில் தாக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதன் மூலம், மனித உடலானது புற்றுநோயிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மையைக் குறைக்கின்றது.

- அதிகமாக ஏற்படுகின்ற மன உளைச்சல், மனிதர்களைப் புகைத்தல், அதிகளவான உணவை உண்ணுதல்,
- மதுபானம் அருந்துதல் போன்ற தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக்குகின்றது.

**பாதகமான மன உளைச்சலில் இருந்து தடுத்துக் கொள்வதற்காக செய்யக்கூடியவை**

- சமய சம்பந்தமான அனுட்டானங்களில் ஈடுபடுங்கள்.
- சமுதாயத்துடன் ஒன்றிணைந்து சமூகநடவடிக்கைகளில் பங்கெடுங்கள்.
- விருப்பமான பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுங்கள்.
- மனதுக்கு ஓய்வளிக்கும் பயிற்சிகளில் ஈடுபடுங்கள்.
- மன உளைச்சலைக் குறைப்பதன் மூலம், புற்றுநோயின் தாக்கத்திலிருந்து விடுபடுவோம்!

## 07. சூழல் மாசடைதல்

- நாம் வாழும் சூழல் மாசடைவதால், புற்றுநோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் பலவிதமான சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.
- சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், விவசாயத்திற்குப் பயன்படுத்தும் கிருமி நாசினிகள், உரங்கள் மற்றும் களைகொல்லிகளின் பாவனையைக் குறைத்தல், எக்ஸ் கதிர் பாவனையைக் குறைத்தல், வளி மாசடைவதைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளால் புற்றுநோய் உருவாவதைத் தவிர்க்கலாம்.
- சூழல்மாசடைவதைத் தவிர்த்து புற்றுநோயின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்று நோயைக் குணப்படுத்தலாமா?

மூன்றிலொரு வீதமான புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதன் மூலம், முற்றாகக் குணப்படுத்தலாம். புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பதற்காக, கீழ்வரும் நோய் அறிகுறிகள், குணங்குறிகள் இருந்தால் உடனடியாக உங்கள் அருகிலுள்ள வைத்தியரிடம் சென்று ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

1. **வாய்ப் புற்றுநோய் அல்லது ஆரம்ப நிலையிலுள்ள வாய்ப் புற்றுநோய்.**
   - இலங்கையில் ஆண்களில் அதிகமாகக் காணப்படும் புற்றுநோய் வாய்ப் புற்றுநோயே ஆகும்.
   - வாய்ப் புற்றுநோயால் தினமும் இரு இலங்கையர் தங்கள் வாழ்வை இழக்கின்றனர்.

### வாய்ப் புற்றுநோய் வராமல் தவிர்க்க நாம் வேண்டியன யாவை?

- வெற்றிலை மெல்லுதல்.
- பாக்கு, பாக்குத்தூள் மெல்லுதல்.
- புகைத்தல்
- (சிகரெட், பீடி, சுருட்டு)
- மதுபானம் பாவித்தல்.

### வாய்ப் புற்றுநோய் வராமல் தவிர்க்க நாம் செய்ய வேண்டிய ஏனையவை

- சத்துணவுக் குறைபாடு தவிர்த்தல்.
- சுகாதாரமான முறையில் வாயைப் பேணுதல்.
- ஹியுமன் பப்பிலோமா வைரஸ் தொற்றுக்களைத் தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ப் புற்றுநோய் ஏற்பட அதிக ஆபத்துக் காரணிகளைக் கொண்டோர் யார்?

- தினமும் 3 தடவைகளுக்குமேல் வெற்றிலை மெல்லுபவர்கள்.
- 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், தினமும் 3 தடவைகளுக்குமேல் வெற்றிலை மெல்லுவதுடன் புகைத்துலும் மதுபானமும் அருந்துபவர்கள்.
- ஒரு நாளைக்கு, பாபுல், பீடா என்னும் பாக்கு பக்கற் ஒன்றையாவது மெல்லுதல்.
- இப்படியான பழக்கம் உடையவர்கள் உடனடியாக தங்களுடைய வாயைப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

## வாய்ப் புற்றுநோய் அல்லது ஆரம்ப நிலையிலுள்ள வாய்ப் புற்றுநோய்க்கான அறிகுறிகள் யாவை?

- வாய்க்குள் அகற்ற முடியாத வெள்ளைத் தழும்பு.
- வாய்க்குள் சிவப்பு நிறமான தழும்பு.
- நீண்ட நாட்களாகக் காணப்படும் வெள்ளையும் சிவப்பும் கலந்த தழும்பு.
- வாயில் ஏற்படும் அசாதாரணமான எரிவும், உதடு வாயினுள் தோன்றிய மென்படலம், தடித்தும் வெள்ளையாகவும் காணப்படல்
- நீண்ட காலமாக ஆறாத புண்கள்.

இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக உங்கள் அருகிலுள்ள பற்சத்திரசிகிச்சை வைத்தியரின் அறிவுரையைப் பெறுங்கள்!

இந்த நோயின் அறிகுறிகளை, நீங்களே பரிசோதித்துக் கொள்ளுவதன் மூலம் (சுய வாய்ப் பரிசோதனை) இலகுவாகக் கண்டு பிடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவ்வாறு சுயவாய்ப் பரிசோதனை செய்வது?

- வாய்ப்பரிசோதனையை செய்வதற்கு நன்கு ஒளியுள்ள இடத்தை தெரிவு செய்யவும்.
- கைகளை சவர்க்காரமிட்டு நீரினால் கழுவிக் கொள்ளுங்கள்.
- கட்டுப்பற்கள் இருந்தால் அவற்றைக் கழற்றுங்கள்.
- உங்கள் முகத்தோற்றத்தில் ஏதாவது மாற்றம் உள்ளதாவெனப் பரிசோதிக்கவும்.
- வாயின் உட்பிரதேசத்தை கண்ணாடியின் துணை கொண்டு பரிசோதியுங்கள்.
- வாயை நன்றாக அகலத் திறந்து விரல்களால் கீழ் உதட்டைத் கீழ்த்திருப்பிப் பரிசோதிக்கவும்.
- வாயை நன்றாக அகலத் திறந்து கன்னங்களின் உட்பிரதேசம், பக்கவாடு என்பவற்றை நன்றாகப் பரிசோதிக்கவும்.
- நாக்கை நன்றாக வெளியிழுத்து நாக்கின் நுனிமுதல் அடிவரை பரிசோதியுங்கள். நாக்கின் பக்கங்களையும் பரிசோதனை செய்யுங்கள்.
- வாயை நன்றாக அகலத்திறந்து நாக்கின் அடிப்பிரதேசத்தையும் நன்றாகப் பரிசோதியுங்கள்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் இருந்தால், உடனடியாக உங்கள் அருகிலுள்ள பற்சத்திர சிகிச்சை வைத்தியரின் அறிவுரையைப் பெறுங்கள்!

**இந்த சுயவாய்ப்பரிசோதனையை எவ்வளவு காலத்துகொரு தடவை செய்ய வேண்டும்?**

மாதம் ஒரு முறையாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுக் கால்வாய்ப் புற்றுநோய்

### நோய் அறிகுறிகள்

மூன்று கிழமைகளுக்கு மேலாகக் காணப்படும் பின்வரும் நிலைமைகள்.

- படிப்படியாக அதிகரித்துச் செல்லும் உணவு விழுங்குவதில் ஏற்படும் கஸ்டம் அல்லது சிரமத்தன்மை.
- உணவு விழுங்கும்போது வலி ஏற்படல்.
- உடல் நிறை குறைவடைந்து மெலிந்து செல்லல்.

## பெருங்குடல் மற்றும் மலவாசல் புற்றுநோய்.

### நோய் அறிகுறிகள்

- மலத்துடன் குருதி வெளியேறல்.
- மலங்கழிக்கும் முறையில் மாற்றம் காணப்படல்.
- அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கல், மலவாசலூடாக குருதி வெளியேறல்.
- ஏனைய நாட்களைவிட மலம் மிகவும் மெல்லியதாக
- வெளியேறல்.
- மலம் கழித்த பின்பும் மலம் கழித்ததில் திருப்தியின்மை போன்ற உணர்வு.
- வயிற்று நோவு
- எதிர்பாராத விதத்தில் உடல் நிறை குறைவடைதல்

## மார்பகப் புற்றுநோய்

இலங்கை வாழ் பெண்களில் அதிகளவில் காணப்படும் புற்றுநோய் மார்பகப் புற்றுநோயே!

மார்பகப் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளவர்கள் யார்?

- மார்பகப் புற்றுநோயை குடும்ப வரலாறாகக் கொண்டவர்கள் (தாய் அல்லது சகோதரி).
- முந்திய மார்பகபுற்று நோய் வரலாறு கொண்ட பெண்கள்.
- சூலகப் புற்றுநோய் வரலாறு கொண்ட பெண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவிடாய் சக்கரத்தை அதிகளவில் எதிர் கொண்ட பெண்கள். அதாவது,

11 வயதுக்கு முன்பு பூப்படைந்தவர்கள்.

50 வயதுக்குப் பின் மாதவிடாய்ச் சக்கரம் நின்றவர்கள்.

- தாய்மைப்பேறு அடையாதவர்கள் அல்லது 35 வயதுக்குப் பின் முதலாவது குழந்தைப் பாக்கியம் பெற்றவர்கள்.
- தாய்ப் பால் கொடுக்காத பெண்கள்.
- வைத்திய ஆலோசனையின்றி ஈஸ்ரோஜன் கொண்ட கருத்தரிப்பு வில்லைகளை மிக நீண்ட காலத்திற்குப் பாவிப்பவர்கள்.

மிகவும் பருமன் கூடிய பெண்கள்.

- மார்பகப் புற்றுநோய் குடும்ப வரலாறு கொண்ட பெண்கள், ஓமோன்கள் அடங்கிய வில்லைகளைப் பாவிப்பது நல்லதல்ல.

**ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறை, மார்பகப் புற்றுநோய்க்கு வழிவகுக்கக்கூடும். அவையாவன**

- அதிகளவு கொழுப்பு உணவை உள்ளெடுப்பவர்கள்.
- குறைந்தளவு மரக்கறி, பழ வகைகளை உள்ளெடுப்பவர்கள்.
- உடற் பயிற்சி செய்யாதவர்கள்.
- மாதவிடாய்ச் சக்கரம் நின்றபின் உடல்நிறை அதிகளவில் கூடியவர்கள்.
- அதிகளவில் மதுபானம் பாவிப்பவர்கள்.
- அதிகளவில் புகைத்தல் செய்பவர்கள்.
- மார்பகங்களில் காணப்படும் பின்வரும் நிலைமைகள் சாதாரணமானவையே. அவையாவன,
- அதிகளவான பெண்களில் இரு மார்பகங்களும் ஒரே அளவில் சமச்சீராக இருப்பதில்லை.
- மாதவிடாய்ச் சக்கரத்தின்போது, ஓமோன்களின் அளவு மாற்றத்தால், மார்பகமானது பல மாறுதல்களுக்கு உட்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பகத்தில் கட்டிகளும் நோவும் மாதவிடாய்ச் சக்கரத்தின் முன்னர் தோன்றுவது வழமையானது.

- மாதவிடாய்ச் சக்கரம் முற்றாக நின்ற பின்னர், மார்பகங்கள் மென்மையடைந்து காணப்படும்.

**மார்பகத்தில் அவதானிக்கக்கூடிய அசாதாரணமான (மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகள்) மாற்றங்கள் யாவை?**

- அண்மையில் மார்பகத்தின் அளவிலோ முலைக்காம்பின் அளவிலோ மாற்றங்கள் அல்லது சமச்சீரின்மை.
- மார்பகத்திலோ அல்லது அக்குளிலோ வீக்கம் அல்லது கட்டிகளும் படர் அடையாளங்கள், மார்பகத்திலும் முலைக்காம்புகளிலும் காணப்படல்.
- மார்பகத்தில் உட்குழிவு காணப்படல்.
- தோடம்பழத்தின் தோலினை ஒத்த, மார்பகத்தோல் மாற்றமடைதல் அல்லது
- மார்பகத்தோல் தடிப்படைந்து காணப்படல்.
- முலைக்காம்பு உள்நோக்கித் திரும்பியிருத்தல். முலைக்காம்பு சிதைவடைந்திருத்தல்.
- பாலைத்தவிர முலைக்காம்பினூடாக ஏதாவது திரவம் வெளிவரல்.
- மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான மிக இலகுவான வழிமுறை என்ன? மாதத்திற்கு ஒரு தடவையேனும் பெண்கள் தங்கள் மார்பகங்களை சுயபரிசோதனை செய்தல் வேண்டும்.

**சுயமார்பகப் பரிசோதனையை எப்போது செய்ய வேண்டும்?**

- எல்லாப் பெண்களும், ஒவ்வொரு மாதமும், சுய மார்பகப்
- பரிசோதனையைச் செய்ய வேண்டும்.
- மாதவிடாயப் பெருக்கு உள்ள பெண்கள், மாதவிடாய்ச் சக்கரம் ஏற்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாதவிடாய்ச் சக்கரம் நின்றபின் மாதத்தின் குறிப்பிட்ட திகதியில், சுய மார்பகப் பரிசோதனையை செய்ய வேண்டும்.

**சுய மார்பகப் பரிசோதனையை எவ்வாறு செய்வது?**

இது இரு படிமுறைகளைக் கொண்டது.

1.மார்பகங்களைப் பார்வையால் பரிசோதித்தல் (Inspection).

2.மார்பகங்களைக் கையினால் தொட்டுணர்தல் (Palpation).

## 1. மார்பகங்களைப் பார்வையால் பரிசோதித்தல் (Inspection) பின்வருமாறு.

- போதிய வெளிச்சமுள்ள பாதுகாப்பான மூடிய அறையைத் தெரிவு செய்யுங்கள்.
- உங்கள் உடலின் மேற்பாகத்திலுள்ள ஆடைகளை முற்றாகக் களையுங்கள்.
- கண்ணாடிக்கு முன்பாக நின்று மார்பகப் பிரதேசத்தை நன்றாக வெளிக் காட்டுங்கள்.
- கீழ்சொல்லப்பட்ட நிலைகளில் உங்கள் இரு மார்பகங்களையும் நன்றாகப் பரிசோதியுங்கள்.
- உங்கள் இரு கைகளையும் பக்கவாட்டில் வைத்த நிலையில் நன்றாக நிமிர்ந்து நின்றபடி.
- உங்கள் இரு கைகளையும் தலைக்கு மேலாக உயர்த்திய நிலையில்.
- இரு கைகளையும் இடுப்பில் வைத்து முன்நோக்கிக் குனிந்த நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மார்பகங்களைக் கையினால் தொட்டுணர்தல் (Palpation) பின்வருமாறு.

- படுத்த நிலையில் பரிசோதிப்பதாயின் பரிசோதிக்கப்படும் மார்பகப் பக்கத்தின் தோற்பட்டையின் கீழ், சிறிய தலையணையை வையுங்கள்.

- பரிசோதிக்கப்படும் பக்கத்திற்குரிய கையைத் தலையின்கீழ் வைக்கவும். மறுகையினால் பரிசோதனையை மேற்கொள்ளவும்.
- அமர்ந்த நிலையிலோ அல்லது நின்ற நிலையிலோ இப்பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

- விரல்களை ஒன்றாக்கி விரல்களின் தட்டையான உட்பாகத்தினால் ஏதாவது கட்டிகள், தடிப்புக்கள், முடிச்சுக்கள், கடினமான பகுதிகள், வலி, நோவு உள்ளனவா என்பதைப் பரிசோதிக்கவும்.

- வலது மார்பகத்தை இடது கையாலும், இடது மார்பகத்தை வலது கையாலும் பரிசோதனை செய்யுங்கள். அதே நேரம் இடது அக்குளை வலது கை விரல்களாலும் வலது அக்குளை இடது கை விரல்களாலும் பரிசோதனை செய்யுங்கள்.

- மார்பகத்தின் எல்லாப் பகுதிகளும் முழுமையாகும் விதத்தில், ஒவ்வொரு மார்பகத்தையும் வலஞ்சுழியாகவும் இடஞ்சுழியாகவும் வெளிப்புறத்திலிருந்து முலைக்காம்பு நோக்கியும் பரிசோதிக்கவும்

- இவ்வாறு மார்பகத்தில் தடிப்பு, வலி, கட்டிகள் உள்ளனவா என்பதைப் பரிசோதியுங்கள்.

- முழு மார்பகங்களையும் மூன்று விதமான அழுத்தங்களைப் பிரயோகித்துத் தொட்டுணர்தல் வேண்டும். முலைக் காம்பைச் சூழ உள்ள கறுத்த வட்டப் பிரதேசத்தை (Areola)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் மெதுவாக அழுத்தி, பாலைத் தவிர வேறு ஏதாவது திரவங்கள் வெளிவருகின்றனவா என்பதைப் பரிசோதனை செய்யுங்கள்.

- குளிக்கும் போதும் மார்பகப் பரிசோதனை செய்யலாம். இங்கு உடம்பிலுள்ள நீரானது உங்கள் சுய மார்பகப் பரிசோதனையை இலகுவாக்கும்.

**சுய மார்பகப் பரிசோதனையில் ஏதாவது வித்தியாசமாக உணரும் பட்சத்தில், எங்கே போக வேண்டும்?**

- உங்கள் பிரதேசத்திலுள்ள சுக வனிதையர் நல கிளினிக்கிற்கு
- உங்கள் அருகாமையிலுள்ள அரசாங்க அல்லது தனியார் வைத்திய அதிகாரி அல்லது உங்கள் குடும்ப வைத்தியரிடம் உங்கள் அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் நடைபெறும் சத்திரசிகிச்சை அல்லது மார்பகக் கிளினிக்குகள்,..
- புற்றுநோய் ஆரம்பக் கண்டுபிடிப்பு நிலையம்,
  இல. 516/1,நரகேன்பிட்டிய, கொழும்பு 05.
  தொலைபேசி இலக்கம் 0113159227.

**சுகவனிதையர் நலக் கிளினிக் என்றால் என்ன?**

சுகவனிதையர் நல சிகிச்சை நிலையமானது, உங்கள் பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதார மருத்துவ மாது ஆகியோரால் மார்பகப் புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் மற்றும் பிறநோய்களை மிக ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக நடாத்தப்படும் சிகிச்சை நிலையமாகும். மேலதிக தகவல்களுக்கு உங்கள் பிரதேசத்திலுள்ள மருத்துவ மாதுவை சந்தியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பகத்தில் ஏற்படும் எல்லாக் கட்டிகளுமே புற்றுநோய்க் கட்டியல்ல. ஆனால், எந்த மார்பகக் கட்டிகளும் புற்றுநோய்க்கட்டிகளாக மாறலாம். தைரியத்துடன் எதிர்கொள்ளுங்கள்! வெற்றியாளராக வலம் வாருங்கள்!

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

- இலங்கையில் பெண்களைத் தாக்குகின்ற புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.
- மிக ஆரம்பத்திலேயே கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை கண்டறியும் பட்சத்தில் இந்நோயை முற்றாகக் குணப்படுத்தலாம்.
- கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது பெரும்பாலும் ஹியுமன் பப்பிலோமா வைரஸ்(HIV) தொற்று, பெண்களில் நீண்ட நாட்களாக இருப்பதால் ஏற்படுகின்றது,
- கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தோன்றுவதற்கு முன்பாக, புற்றுநோய்க்கு முன்பான ஆரம்ப இழையவியல் மாற்றங்கள் தோன்றுகின்றன.
- ஆனால் இறுதிவரையில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் அறிகுறிகள் காணப்பட மாட்டாது.

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் அறிகுறிகள் எவை?

- யோனிவழியூடாக ஒழுங்கற்ற குருதிப் பெருக்கு.
- தாம்பத்திய உறவின் பின்னர், யோனியினூடாகக் குருதிப் பெருக்கு.
- யோனியினூடாக குருதி கலந்த, அல்லது மணமுடைய குருதிப் பெருக்கு.
- மாதவிடாய்ச் சக்கரம் முற்றாக நின்ற பின்னர் குருதிப்பெருக்கு ஏற்படல்.
- இவ்வறிகுறிகள், புற்றுநோய் தவிர வேறு நோய்களுக்கும் பொதுவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்பட, அதிகவாய்ப்புள்ளவர்கள் யார்?

- ஹியுமன் பப்பிலோமா வைரஸ்(ரீஏ) தொற்றுடைய பெண்கள்.
- மிக இளவயதில் பாலியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தவர்கள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் இணைகளைப் பெற்றவர்கள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் இணைகளைக் கொண்டவர்களை, பாலியல் இணைகளாகக் கொண்டவர்கள்.
- தான் புகைப்பவராகவோ அல்லது அதிகளவில் புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்கன்.
- சில நோய்களுக்காக, நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் மருந்து வகைகளை உள்ளெடுப்பவர்கள்.

## எதிர் காலத்தில் உங்களுக்கு கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்துக் காரணியைக் கொண்டவரா என்பதை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?

- இதை 'பப்' பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ளலாம்.
- Pap Smear Test, "பப்" பரிசோதனை என்பது கருப்பைக் கழுத்தில் செய்யப்படுகின்றது.
- மாதவிடாய்ப் பெருக்கு அல்லாத சாதாரண ஒரு நாளில், இப்பரிசோதனைக்காக வருகை தாருங்கள்.
- இது உங்களை உறுத்தாது.
- கருப்பைக் கழுத்துப் புற்று நோயாக உருவெடுக்கக்கூடிய, மிக மிக ஆரம்ப நிலையிலுள்ள கருப்பைக் கழுத்து, இழைய மாற்றங்களைக் கண்டறிய முடியும்.

## யார் இந்தப் பரிசோதனைக்கு அதிகமாகப் பரிந்துரை செய்யப்படுகின்றார்கள்?

- 'பப்' பரிசோதனையானது ஆரோக்கியமாக வாழும் பெண்களுக்குரிய பரிசோதனையாகும்.
- முதலாவது தாம்பத்திய பாலியல் நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து 5 வருடங்களின் பின்னர், எல்லாப் பெண்களுக்கும் பரிந்துரை செய்யப் படுகின்றது.

- 35 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பெண்களும் சுக வனிதையர் நலக் கிளினிக்குகளில் இப்பரிசோதனையைச் செய்து கொள்ளலாம்.

**பரிசோதனையின் முடிவுகள் பிழையாயின் என்ன நடக்கும்?**

கண்டறியப்பட்ட இழையமாற்றங்களை உறுதிப்படுத்த, நீங்கள் மேலதிக பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படுவீர்கள்.

இதற்காக வைத்திய ஆலோசனை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்படி பரிந்துரைக்கப் படுவீர்கள்.

**பரிசோதனையின் முடிவுகள் சாதாரணமாயின் என்ன நடக்கும்?**

- இது மிகவும் இன்பமான செய்தி.
- நீங்கள் 5 வருடங்களின் பின்னர், இந்தப் பரிசோதனையைச் செய்யும்படி பணிக்கப் படலாம்.
- இப்பரிசோதனையை நான் எங்கு செய்து கொள்ளலாம்?
- நாடு பூராகவும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடாத்தப்படுகின்ற எல்லாச் சுக வனிதையர் நலக கிளினிக்குகளில்
- உங்கள் அருகாமையில் உள்ள சுக வனிதையர் கிளினிக்குகள் பற்றிய தகவல்களை உங்கள் பிரதேச குடும்ப சுகாதார மாதுவிடம் அறிந்து கொள்ளலாம்.
- அரசாங்க வைத்தியசாலைகளில் நடைபெறும் எல்லாச் சுக வனிதையர் நலக் கிளினிக்குகள், பெண்நோயியல் கிளினிக்குகள்
- ஆரம்ப புற்றுநோய்க் கண்டுபிடிப்பு நிலையம், தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல: 516/1, எல்விற்றிக்கல மாவத்தை, நரகேன்பிட்ட.
தொலைபேசி - 0113159227.

- தனியார் வைத்திய சாலைகள், கிளினிக்குகள்.

**கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை தடுக்க பின்வருவனவற்றில் அவதானமாயிருங்கள்!**

- திருமணத்திற்கு முன்பான சகல பாலியல் நடவடிக்கைகளையும் முற்றாகத் தவிருங்கள்.

- 35 வயதுக்கு மேற்பட்ட எல்லாத் திருமணமான பெண்களும் அருகிலுள்ள சுக வனிதையர் கிளினிக்குகளுக்குச் சென்று, உங்கள் முதலாவது பப் பரிசோதனையைச் செய்து கொள்ளுங்கள்.

- பாதுகாப்பற்ற உடலுறவு எனச் சந்தேகிக்கும் பட்சத்தில், ஆணுறைகளைக் கட்டாயம் பயன் படுத்துங்கள்.

- கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்பட, அதிக ஆபத்துக்காரணிகளைக் கொண்ட பெண்கள், 35 வயதுக்கு முன்பாக உங்கள் பப் பரிசோதனையைச் செய்து கொள்ளலாம்.

- உங்கள் தாம்பத்திய நடவடிக்கைகளை நம்பகமான ஒருவருடன் மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

- தற்போது, கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்குரிய ரீஏ வக்சீனானது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதைத் தற்போது தனியார் வைத்திய சாலைகளில் பெற்றுக் கொள்ளமுடியும்.

- பாலியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக, இந்த HPV தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதால், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் வராமல் காத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வளமான வாழ்க்கையை பப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
இச்சேவையானது எல்லாச் சுக வனிதையர் கிளினிக்குகளில் இலவசமாக வழங்கப் படுகின்றது.

## ஆண்களில் ஏற்படும் புரொஸ்டேட் புற்றுநோய் (சுக்கிலச்சுரப்பி) நோய் அறிகுறிகள்

சிறுநீர் கழிக்கவேண்டிய உபாதை இருந்தாலும் சிறுநீர் கழிப்பதில் சிரமம்.
சிறுநீர் கழிக்கும்போதும், ஆரம்பிப்பதிலும் தொடர்வதிலும் ஏற்படும் சிரமம்.
சிறுநீர் கழித்த பின்பும் முற்றாக சிறுநீர் வெளியேறியதாகத் தோன்றாத தன்மை.
அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல்.
இரவில் சிறுநீர் கழிக்கும் எண்ணிக்கை விகிதம் அதிகரித்தல்.
சிறுநீருடன் குருதி கலந்து வெளியேறுதல்.
மேற் குறிப்பிட்ட அறிகுறிகள் சுக்கிலச்சுரப்பி சம்மந்தமான வேறு பிரைச்சினைளுக்கும் ஏற்படும்

## கேடயப்போலிச் சுரப்பிப் புற்றுநோய் (தைரொயிட்)-நோய் அறிகுறிகள்

தைரொயிட் சுரப்பி பெரிதாகுதல் அல்லது அளவில் வித்தியாசப்படல்.
கழுத்தின் இரு பாகங்களிலும் நெறிக்கட்டி தோன்றுதல்.
காரணமில்லாமல் குரல் கரகரப்படைதல்.
உமிழ்நீர், உணவு விழுங்குவதில் சிரமம்.
மூச்சு எடுப்பதில் சிரமம் காணப்படல்.
கழுத்தில் வலி ஏற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பைப் புற்றுநோய் (எண்டோமெற்றியல்)

**கருப்பைப் புற்றுநோய் சம்பந்தமான ஆபத்துக் காரணிகள் யாவை**

- வயதாதல்
- மிக இள வயதில் பூப்படைந்தவர்கள்.
- தாமதமாக் மாதவிடாய்ச் சக்கரம் நின்றவர்கள்.
- தாய்மைப்பேறு அடையாதவர்கள்
- மார்பகப் புற்றுநோய் கருப்பைப் புற்றுநோய் பெருங்குடல் புற்றுநோய் ஆகியவற்றை குடும்ப வரலாறாகக் கொண்டவர்கள் (தாய் அல்லது சகோதரி).
- முந்திய மார்பகபுற்று நோய் வரலாறு கொண்ட பெண்கள்.
- மிகவும் பருமன் கூடிய பெண்கள்.
- சில வகையான சூலகக்கட்டிகள் உள்ள பெண்கள்.
- சலரோகம் உள்ள பெண்கள்.
- மார்பகபுற்று நோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் Tamoxifen (ரமெக்சிபன்) எனும் மருந்து

**கருப்பைப் புற்றுநோய்க்கான அறிகுறிகள் யாவை?**

மாதவிடாய்ச் சக்கரம் முற்றாக நின்ற (மெனேபோஸ்) பின்னர் யோனியினூடாகக் குருதிப் பெருக்கு ஏற்படல்.

- மாதவிடாய்ச் சக்கரம் முற்றாக நிற்பதை அண்டிய (பெரிமெனேபோஸ்) காலப்பகுதியில் ஏற்படும் அசாதாரண குருதிப் பெருக்கு ஏற்படல்.

- வெள்ளை படுதல் (புற்றுநோய் தவிர வேறு நோய்களுக்கும் பொதுவானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படுத்த படுக்கையில் உள்ள நோயாளிகளை பராமரிக்கும் அடிப்படை முறைகள்

• **குளிக்க வைத்தல்**

தினமும் நோயாளியைக் குளிக்க வைக்க வேண்டும் அல்லது துடைக்க வேண்டும்.

• **தோல் பாதுகாப்பு முறை**

புண் வராமல் தடுக்க நோயாளியை குறைந்தது 4மணி நேரத்திற்கு ஒரு முறை மாற்றி மாற்றி படுக்க வைக்க வேண்டும்

• **வாய் சுத்தம் செய்யும் முறை**

மெதுவாக பிரஸ் அல்லது விரலால் அல்லது ஸ்பூனில் துணியைச் சுற்றி பல் துலக்க வேண்டும்.

உதடு காய்ந்த நோயாளிகளுக்கு எலும்பிச்சை சாறு பிழிந்து தண்ணீரில் பல்துலக்க வேண்டும். மற்ற நோயாளிக்கு உப்புத் தண்ணீர் வைத்துக் கழுவலாம்.

• **மற்ற பொதுவான பராமரிப்பு**

தினமும் தலை முடியை வார வேண்டும் 2 வாரத்திற்கு ஒரு முறையாவது சாம்பூ அல்லது சோப்பு உபயோகப்படுத்தி தலைமுடியைச் சுத்தம் செய்ய வேண்டும்.

நகம் வெட்ட வேண்டும் மற்றும் தூய்மையாக வேண்டும்

உதடு காயாமல் இருக்க தேங்காய் எண்ணெய் தடவ வேண்டும்.

கண்களை தினமும் துணி வைத்து துடைக்க வேண்டும்
சுயநினைவற்ற நோயாளிக்கு தினமும் கண், மூக்கு, காது போன்றவற்றை சுத்தம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி

இல:867 ஆறுமுகம் வீதி,வட்டக்கச்சி

விழியோரம் கசியும் கண்ணீர்த் துளிகள்
உறவுகளை மட்டுமல்ல
உள்ளத்தையும் ஒரு நொடி
மௌனமாக்குகின்றது
மரணம் என்பது.......
மனிதனுக்கு இயல்பு
எப்பொழுது, எப்படி, யாருக்கு வருகின்றது
என்பதில் தான் வேதனை.
வலியின் வீதாசாரமிருக்கும்
உங்கள் இறப்பின் வீதாசாரத்தை
கணக்கிட முயல்கின்றோம்
முடியவில்லை

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
தி.இராசநாயகம் (தலைவர்)
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்
இல்லக்குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 |  | 24 |
| 07 | | 04 |
| 1950 | | 2016 |

மு/திருமுறிகண்டி இந்துவித்தியாலய ஆசிரியர் திருமதி மர்மிதா கமலேசன் அவர்களின் மாமியார்

அமரர் திருமதி கமலாதேவி புவனேஸ்வரன்

**இன்முகம் காட்டி உறவுகளை உபசரித்து**

**இன்சொல் பேசி மகிழ்வித்தவரே**

**கனிவான கதையினால் அனைவரையும் கவர்ந்தவரே**

**காலத்தின் கோலத்தினால் காற்றாய் பறந்தீரோ**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மு/திருமுறிகண்டி இந்துவித்தியாலயம்**

**அதிபர், ஆசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 24 |
| 07 | 04 |
| 1950 | 2016 |



## அமரர்
## புவனேஸ்வரன் கமலாதேவி

[illegible], ஆறுமுகம் வீதி, வட்டுக்கோட்டை

உயிருக்குள் உயிரான
ஒளியின் திருமுகமே
வீசும் காற்றோடு
கலந்திட்ட மாயமென்ன
உம் பிரிவால் வடியும்
கண்ணீரும் காயவில்லை
விடியும் ஒவ்வொரு பொழுதும்
உன் முகம் தேடுதே

எமது ஆலய பரிபாலனசபையின் செயலாளர் திரு.புவனேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியாரின் பிரிவில் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்

பரிபாலனசபை
அருள்மிகு கந்தசுவாமி ஆலயம்
ஆறுமுகம் வீதி, வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...

மண்ணில் 1950 07 12



விண்ணில் 2016 04 24

## அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி

(இல. 867, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.)

எல்லோருக்கும் நல்லவராய்
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பண்புடனும் பழகி
ஓர்நாளில் மறைந்த மாயமென்ன?
காலத்தால் நாம் உம்மைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் எம்முயிர் உள்ளவரை
காயாத விழிநீரால் உங்கள் ஆத்ம
சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திப்போம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

[illegible] பிரதேச சபையில் பணியாற்றும் திரு. [illegible] அவர்களின் அன்புத் தாயாரின் பிரிவுத் துயரில் தாமும் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 | 24 |
| 07 | 04 |
| 1950 | 2016 |

## அமரர்

## திருமதி புவனேஸ்வரன் கமலாதேவி

இல 867, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி

வட்டக்கச்சி கிராமத்தின் வளர்ச்சியில் அக்கறைகாட்டி ஆறுமுகம் வீதி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் தலைவராய், செயலாளராய், கி.அ.சங்க தலைவர் என்று அரும் பணியாற்றும் திரு புவனேஸ்வரன் அவர்களின் அர்ப்பணிக்கேல்லாம் பின்புலமாய் நின்று பேருதவியாற்றிய திருமதி கமலாதேவி புவனேஸ்வரன் அவர்களின் இறப்பு அறிந்துயர் கொண்டதே

தாய் கொண்டு வந்ததை
தாலாட்டி வைத்ததை
நோய் கொண்டு போகும் நேரம் வந்ததுவே

பாசப் பிணைப்போடு வாழ்ந்த திரு.புவனேஸ்வரன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரக்குழந்தைகளின் ஆறாத்துயரை பகிர்வதோடு மீண்டும் பிறப்புண்டேல்
வட்டக்கச்சி மண்ணில் ஆறுமுகம் வீதி அருள்மிகு
கந்தசுவாமி கோவிலின் அருளாட்சி புலத்தில் பிறக்க வேண்டுவதோடு
மீளாத்துயில் கொண்ட அன்னையின் மலர் பாதங்களில் எங்கள் அஞ்சலிகள்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**கிராம அபிருத்திச் சங்கத்தினர்**
**மாயவனூர் மத்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

12 - 07 - 1950



மறைவு

24 - 04 - 2016

அமரர்

## திருமதி புவனேஸ்வரன் கமலாதேவி

கண்முன்னே இருந்த உயிர்
காற்றோடு கலந்ததுவோ?
காலனவன் கவர்ந்திழுக்க
கண்மூடிப் போனதுவோ?
விண்ணுள்ளவரை காற்றும்
நிலமும் உள்ளவரை
உங்கள் நினைவுகளை மறவோம்
எங்கள் நெஞ்சத்தில் நிலைப்பீர்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

33ம் அணி,
மருத்துவபீடம்,
யாழ்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

*சிவக்கொழுந்து + *நாகரத்தினம்
↓
- *இராசேஸ்வரி
- புவனேஸ்வரி
- ஜெகதீஸ்வரி
- இராசேஸ்வரன்
- ஜெகதீஸ்வரன்
- புவனேஸ்வரன்
- சந்திரேஸ்வரன்
- *மகேஸ்வரன்

*ஆறுமுகம் + *மாணிக்கம்
↓
- *சிவசுப்பிரமணியம்
- விசாலாட்சி
- *கனகேஸ்வரி
- *சிவபாதசுந்தரம்
- *கமலாதேவி

புவனேஸ்வரன் + *கமலாதேவி
- கமலேசன் + மர்மிதா → சப்தகி
- தர்மீசன்
- மயூரதனி + கஜனன் → கேசியா
- யோதிகா

*அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

எமது இதயத்தில் நிறைந்து நிற்கின்ற எமது இல்லக் குலவிளக்கு அன்புத் தாய் அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்த போதும் சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஓடோடி வந்து உடன் உதவிகள் பல செய்த மருத்துவ பீட நண்பர்களுக்கும் எமது தாய் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதலளித்த உறவினர், அயலவர்கள், நண்பர்கள், திணைக்களம் சார் உத்தியோகத்தர்கள், மற்றும் வைத்தியர்கள் மருத்துவபீட மாணவர்கள் ஆகியோருக்கும் தொலைபேசியுடாகவும் வேறுவகையிலும் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தும் பதாதைகள், மலர்மாலைகள், மலர்வளையங்களைத் தயாரித்து உதவியவர்களுக்கும் நினைவு அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், வரண்முறையுடன் அபரக்கிரிகைகள் நடாத்திய குருக்கள் அவர்களுக்கும் பொறுமையுடன் சுட்டெரிக்கும் வெய்யிலிலும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் 24.05.2016 இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும் இம்மலரை அழகுறவும் நிலைத்து நிற்கக் கூடியதாக அச்சிட்டுத்தந்த சிவாபதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



குடும்பத்தினர்

சிவா பதிப்பகம், 5, கனகபுரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org